118301

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# திருவாதிரை மலர்

1964

பொதுசன நூலகம் தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.
118301

வெளியீடு:
ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானம்,
காரைநகர்.

விலை: 1-00.

118301 RC
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவஸ்தான வெளியீடு இல: 2

2945

கேட்டாயோ தோழி கிறிசெய்த வாறொருவன்
தீட்டார் மதில்புடைசூழ் தென்னன் பெருந்துறையான்
காட்டா தனவெல் லாங்காட்டிச் சிவங்காட்டித்
தாட்டாமரை காட்டித் தன்கருணைத் தேன்காட்டி
நாட்டார் நகைசெய்ய நாம்மேலை வீடெய்த
ஆட்டான் கொண்டாண்டவா பாடுதுங்காண் அம்மானாய்.

கலாதேவி அச்சகம்,
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# முன்னுரை

ஊர்திரை வேலை யுலாவு முயர்மயிலைக்
கூர்தருவேல் வல்லார் கொற்றங் கொள்சேரிதனில்
கார்தரு சோலைக் கபாலீச் சரமமர்ந்தான்
ஆதிரை நாள் காணுதே போதியோ பூம்பாவாய்.

என்று திருஞானசம்பந்தப் பெருமான் திருவாதிரை விழாக்காண்பது மனிதப்பிறவியின் நோக்கமென்று கூறிப்பூம்பாவையை அழைக்கின்ருர். பூம்பாவை யின் என்பு முன்னையினும் அழகிய பெண்ணுக உருப்பெற்றுக் குடத்தினின்று வெளிவருகின்றது. சேக்கிழார் சுவாமிகள்,

மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லாரடி யார்தமை யமுது செய்வித்தல்
கண்ணி னுலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாமெனி னுலகர்முன் வருகெனவுரைப்பார்.

என்று, அவர் நல்விழா (அண்ணலார் விழா)க் காண் பதன் பயனை, சம்பந்தப் பெருமான் திருவாக்கினில் நிகழ்ந்த ஆணையால், பூம்பாவை குடத்தினின்றும் வந்த வரலாற்ருல் உணர்த்துகின்ருர். திருஞான சம்பந்தந்தப் பெருமானுக்கு ஆளுடைய அரசர் திருவாரூர்த் திருவாதிரைவிழாச் சிறப்பை,

துன்ப நும்மைத் தொழாத நாள்க ளென்பாரும்
இன்ப நும்மை யேத்து நாள்க ளென்பாரும்
நும்பி னெம்மை நுழையப்பணியே யென்பாரும்
அன்ப ஞரூ ராதிரை நாளா லதுவண்ணம்.

என்று பலவாருக ஒரு திருப்பதிகத்தால் உணர்த்து கின்ருர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு சிறந்த திருநாளாகிய திருவாதிரையில் இங்கு சிறப்பாக விழா எடுக்கப்படுவது நமது புண்ணியப் பேறேயாம். இத்திருவாதிரை நாளில் திருவாதிரை விழாப்பற்றிய பல கட்டுரைகள் கொண்ட ஒரு நூல் (திருவாதிரை மலர்) வெளிவருது மிகவும் நன்மை பயக்கும் என்று கருதினோம். நடராஜப் பெருமான் திருவருளால் அது நிறைவேறி இன்று வெளிவருகின்றது. இத்திருவாதிரை மலருக்கு மேலும் நறுமணமூட்டுவதாய் இங்கு இவ் விழாவில் ஓதப்பட்டு வரும் திருவூடல் மலரில் முதலிடம் பெறுகின்றது, இது பக்தியை வளர்ப்பதாய், தத்துவக் கருத்துக்கள் நிறைந்த தேவாரப்பாடல்களைக் கொண்டது.

இந்த வெளியீட்டை வெளியிடும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட அன்பர்கள் தங்கள் பணியைச் செவ்வனே நிறைவேற்றியுள்ளார்கள்.

யாவர்க்கும் சௌந்தராம்பிகாசமேத சுந்தரேசுவரப்பெருமான் திருவருள் கிடைப்பதாக.

துதிவாணி வீரம் விசயம் சந்தானம் துணிவுதனம்
மதிதானியம் சவுபாக்கியம் போகம் அறிவழகு
புதிதாம் பெருமையறங் குலநோயகல் பூண்வயது
பதினாறு பேறுந் தருவாய் மதுரைப் பராபரனே.

ஈழத்துச் சிதம்பரம் தேவஸ்தானம்,
காரைநகர்,
குரோதி ஹூ மார்கழித்திருவாதிரை.

அ. ஆண்டிஐயா,
து. முருகேசு,
ஆதீனகர்த்தர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

ஸ்ரீ கி. பி. ஹரன் அவர்கள்,
பிரதம ஆசிரியர், "ஈழநாடு".

சைவ உலகெங்கும் புதுமலர்ச்சியுடன் நடை பெறும் திருவாதிரைத் திருவிழா, மாணிக்கவாசகரின் திருவிழா; திருவாசகத் திருவிழாவாகும். இந்தப் பத்து நாட்களிலும் கூத்தப் பெருமானுக்கும் திருவாதவூரடிகளுக்கும் சேர்த்துச் சைவப்பெருமக்கள் திருவிழாக் கொண்டாடும அருமையைப் பார்க்கக்கூடியதாகவுள்ளது. சிதம்பரேசரின் தூக்கிய திருவடியிலே வைத்த மலரை, வாதவூரரின் சிரசில் வைத்து மணிவாசகம் பாடிய நடேசருக்கும் மாணிக்கவாசகருககும் சேர்த்துச் சரிசமமாகப் பூசை நடைபெறுகின்றது. சித்தமல மறுத்துத் தம்மைச்சிவமாக்கி அத்தன் ஆண்டுஅருளினும், இந்தப் பெரும்பேற்றினை யாரே பெறமுடியுமென்ற அவரின் எக்களிப்பின் உண்மையை இப் பூசையின்போது நேரே, கண்குளிர மனம்குளிரப் பார்க்கின்றோம். "நாயினுங் கடையவனுக" இருப்பினும் இறைவன் திருவருள் நம்மையும் சிவமாக்கி ஆண்டுகொள்ளும் என்ற புது நம்பிக்கையையும் இத் திருவிழா நமக்கு அளிக்கின்றது. கடையவனுக்கும் கடைத்தேற்றமுண்டு, அதுவும் இந்தப்பிறவியிலேயே என்பதை, நமக்கு அறிவுறுத்தி, "கண்ணைத்துயின்று அவமே காலத்தைப் போக்கும்" நம்மை, "விண்ணுக்கொருமருந்தை வேதவிழுப் பொருளைக் கண்ணுக் கினியானைப்பாடி," "நலந்திகழப் பங்கயப் பூம்புனல் பாய்ந்து ஆடுமாறு," தட்டி எழுப்புகின்றன அவரது திருவெம்பாவைப் பாடல்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவண்ணுமலையிலே பெருமான் இப் பாடல்களைப் பாடினரெனினும், சைவ உல கத்தின் உயிர்நிலையான சிதம்பரத்தில் இவ் விழா மிக விசேஷம் பெற்றமைக்குக் கார ணம் இருக்கத்தான் வேண்டும், ஈழத்தி லிருந்து வாதுக்குச்சென்ற புத்தனை, சிதம் பரத்தில் வைத்துத்தான் மாணிக்கவாசகர் வென்ருர். சைவத்திற்கு நேர்ந்திருந்த பெரும் ஆபத்தை நீக்கினர். இன்றேல் இன்று சைவமேது? சைவர்களேது? சைவ உலகம் அந்த வெற்றிவிழாவை நன்றியுடன் சிதம் பரத்தை மையமாகக்கொண்டு போற்றுகின் றது. சைவமக்கள் தாழ்மை உற்றதற்குக் காரணம் அவர்கள், தமக்குள் இருக்கும் பெருஞ் சக்தியை உணராமலும், இறை அருளை மறந்தும்விட்டதுதான். இதை இடித்து இடித்துக் காட்டும் திருவெம்பா வைப் பாடல்கள் சைவர்களாகிய நாம் புத் துயிர் பெற்றுப் புதுவாழ்வு வாழ வழி காட்டுகின்றன. இதனுல்தான் இந்த வெற்றி விழாவிலே இப் பாடல்கள் பாடப்படுகின் றனபோலும்.

ஈழத்துச் சிதம்பரமென்னும் காரைநகர்ச் சிவா லயத்திலே திருவாதிரைத் திருவிழா மிக விசேஷம். ஏராளமான பக்தர்கள் கூடி ஸ்ரீ நடராஜ தரிசனம் செய்து, அவனருளிணைப் பெற்றுவருகின்றனர். சமீப வருடங்கள் சிதம்பரயாத்திரை தடைபட்டதால், ஈழத் துச் சிதம்பரத்திற்கு அதிகமானபக்தர்கள் வருகின் றனர். வந்து கூடும் சைவநன்மக்களுக்குச் சமய

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA.



ஞானத்தையும் பக்தியையும் அதிகரிக்கச் செய்யும் முறையில் மாணிக்கவாசகர் திருவிழாவை அவ்வூர் மக்கள் சிறப்புடன் நடத்திவருவது அந்தக் கூத்தப் பெருமானின் திருவருளே.

இவ்வாண்டில் அந்தப்பணியினை ஓங்கச் செய்ய ஆதீனகர்த்தர்கள் முதன் முதலாகத் திருவாதிரை மலரினை வெளியிட்டுள்ளது, போற்றத்தக்கதாகும். இதில் பல அருளாளர்கள் அருமையான கட்டுரை களில் திருவாதிரைவிழாச் சிறப்பை விளக்குகின்றார் கள். அச்சிவாலயத்தில் மார்கழித் திருவாதிரையில் ஓதப்பெறும் திருவூடல் பற்றிய விளக்கமும் இதில் சேர்க்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. இது என்றும் வாடாத அருள்மலர்; பசுபுண்ணியமுமாம்; சமய அறிவையும் பக்தியையும் வளர்க்கப் பெரிதும் பயன்படும். இவ்வித புண்ணியப் பணிக்குச் சைவ நன்மக்களின் ஆதரவு மேன்மேலும் கிடைக்க, ஈழத் துச் சிதம்பரேசரின் பூரண அருள் கிடைக்கு மென்பதுறுதி.

கி. பி. ஹரன்

யாழ்ப்பாணம்,
குரோதி ஹூ கார்த்திகை மீ",
விநாயக ஷட்டித் திருநாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுரை

திருவாரூர்ப் புற்றிடங் கொண்டாரை வழிபட்டுத் திருப்புகலூரை நோக்கிவரும் திருநாவுக்கரசு நாயனாரை, எதிர்கொண்டழைக்கின்றதிருஞானசம்பந்தப் பெருமான், திருவாரூர் தொழுது அநுபவித்த தன்மையைக் கேட்கின்றார். சேக்கிழார் சுவாமிகள், "செப்பிய வண்டமிழ் மாலையாலே திருவாதிரை நிகழ் செல்வம் சொன்னார்" என்று நாவரசர் கூறியருளிய திறத்தைக் கூறுகின்றார். திருவாதிரை விழாஷ செய்யுளில் செல்வம் என்று கூறப்பட்டிருக்கின்றது. இச்செல்வம் மற்றைய எல்லாச் செல்வங்களினும் தலையாயது; நிலை பேறுனது; கண்ணால் அநுபவிக்கப்படுவது. இதன் சிறப்பை "ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள" என்பதனால் உணர்க. "செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே" என்பது திருஞானசம்பந்தர்திருவாக்கு

இவ்விதமான பெருஞ்சிறப்பினையுடைய திருவாதிரை விழா நமது கிராமத்தில் நடைபெறுவது பெறுதற்கரிய பேருகும். இந்தப் பேற்றை அநுபவிக்க மணிவாசகர் விழா, மாணிக்கவாசகர் மடாலயம், சிவாச்சிரமம் என்பன சிறந்த சூழலை உண்டாக்குகின்றன. மேலும் சிறப்புச் செய்யும் வகையில் இந்தத் தேவஸ்தான ஆதீனகர்த்தர்கள் திருவாதிரை மலர் வெளியிடத் தீர்மானித்து, எம்மிடம் தங்கள் கருத்தைத் தெரிவித்தனர். அவர்கள் கருத்துப்படி இத் திருவாதிரைமலர் வெளிவருகின்றது.

இந்த மலரில் முதலிடம் பெற்று வெளிவரும் திருவூடல் இந்தத் தேவஸ்தானத்தில் பல ஆண்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களாக ஓதப்பட்டுவருவது. இதனைத் தொகுத்தவர்கள் "ஈழத்துச்சிதம்பரம்" நூலாசிரியரும், இக்கோயில் பிரதம ஆசாரியரும் ஆகிய சிவஸ்ரீ ச. கணபதீசுவரக்குருக்கள் அவர்கள். அவர்களது முயற்சிக்கு சைவ உலகம் என்றும் கடப்பாடுடையது. அன்றியும், எங்கள் கேள்விக்கிணைந்து தங்கள் பல அலுவல்களுக்கிடையில் சிறந்த கட்டுரைகளை எழுதியுதவிய அறிஞர்கள் யாவர்க்கும் உளங்கலந்த நன்றியுரியது.

இம்மலர் உருவாகும் வகையில் வேண்டிய ஆலோசனைகள் கூறித் திருத்தங்கள் செய்துதவிய, கந்தரோடைத் தமிழ்க்கந்தையா வித்தியாசாலைத் தலைமை ஆசிரியர் பிரம்மஸ்ரீ சு. சிவசுப்பிரமணிய ஐயர் அவர்களும், ஊர்காவற்றுறைக் கிராமசேவையாளர் திரு. ந. அருளையா அவர்களும், காரைநகர் இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. நா. கனகசுந்தரம் அவர்களும் எங்கள்பாராட்டுதலுக்கு என்றும் உரியவர்கள்.

அட்டைப்படத்தை அமைத்துத்தந்த அச்சுவேலி கிறீஸ்தவக்கல்லூரி ஆசிரியர், திரு. க இராசரத்தினம் (மேடம்) அவர்களுக்கும், இந்நூலை வெளியிடுதல் சம்பந்தயாகப்பல்லாற்றானும்உதவிகள்புரிந்த நீர்வேலிக் கந்தசுவாமிகோயில் பிரதம ஆசாரியர் சிவஸ்ரீ சு. இராசேந்திரக்குருக்கள் அவர்களுக்கும், கல்வியங்காடு இந்துக்கல்லூரி ஆசிரியர் ஸ்ரீ.சி. சரவணபவன்(சிற்பி)B A. அவர்களுக்கும், வல்வை, பண்டிதர், சங்கர வைத்தியலிங்கனார் அவர்களுக்கும், அரசகருமமொழித்திணைக்களத்தைச்சேர்ந்த திரு. வே. சிவகுரு B. Sc. அவர்களுக்கும் எமது நன்றியைக் கூறுகின்றோம்.

பொதுசன நூல்நிலையம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம்மலருக்கு அணிந்துரை உதவி, சிறப்புச்செய்த ஈழநாடு பிரதமாசிரியர் ஸ்ரீ கி. பி. ஹரன் அவர்களுக்கு எங்கள் நன்றியுரித்தாகுக. மிகக் குறுகியகாலத்தில் இம்மலரைச் சிறப்பாக அச்சிட்டுதவிய சுன்னாகம் கலாதேவி அச்சகத்தாருக்கும், இந்த வெளியீட்டில் எமக்குப் பொருள்முட்டுப்பாடு இல்லாமல் உதவிய பேரன்பர்களுக்கும் யாம் என்றும் கடப்பாடுடையோம்.

வணக்கம்.

பொய்யெல்லாம் மெய்யென்று புணர்முலையார் போகத்தே
மையலுறக் கடவேனை மாளாமே காத்தருளித்
தையலிடங் கொண்டபிரான் தன்கழலே சேரும்வண்ணம்
ஐயனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே.

காரைநகர்,
குரோதி ௵,
மார்கழித் திருவாதிரை.

க. சிற்றம்பலம்.
க. வைத்தீசுவரக் குருக்கள்.

# உள்ளுறை

1. திருவுடல்
—சிவஸ்ரீ. ச. கணபதீசுவரக்குருக்கள்

2. ஆதிரை விழவும் அம்பா ஆடலும்
—ஸ்ரீமத். சி. சுப்பிரமணியதேசிகர்.

3. உயிர்நோயை அகற்றும் திருவாசகத்தேன்
—திரு. க. இராமச்சந்திரன்
ஆங்கில சம்யமஞ்சரி ஆசிரியர்

4. மார்கழித் திருவாதிரை

5. திருக்கோவையார்த் தலங்கள்
—சங்கநூற்செல்வர், பண்டிதமணி சு.அருளம்பலவனார்

6. கண்களிரண்டும் அவன்கழல் கண்டு களிப்பன ஆகாதா? ஆகுமா?
—திரு. மு கந்தையா B. A. (Hons)

7. வாதவூரர் வரலாற்றுக்குறிப்பு
—புலவர் பாண்டியனார்.

8. மணிவாசகர் கண்ட தில்லை
—திரு.தொ.மு.பாஸ்கரத்தொண்டைமான் M.A., I.A.S.

9. வானமும் வையமும்
—வித்துவான் கி. வா. ஜகந்நாதன் M. A.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டத் தக்கதறிவோய்நீ
வேண்டமுழுதும் தருவோய்நீ
வேண்டு மயன்மாற் கரியோய்நீ
வேண்டியென்னைப் பணிகொண்டாய
வேண்டி நீயாதருள் செய்தாய்
யானுமதுவே வேண்டினல்லால்
வேண்டும் பரிசொன்றுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PUBLIC LIBRARY
JAFFNA.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிவஸ்ரீ ச. கணபதீசுவரக் குருக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

தேசிய நூலகப் பிரி
மாநகர நூலக சே
யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணம் — காரைநகர்

## ஸ்ரீ சுந்தரேசுவர சுவாமி கோயிலிலே
மார்கழி மாசத் திருவாதிரையிலே
ஓதப்பெற்று வரும்

# திருவூடல்.

ஈழத்துச் சிதம்பர நூலாசிரியரும்,
அகில இலங்கைச் சைவசமயக் குருமார்சபை
முன்னாள் தலைவரும்,
அகில பிராமண குரு சமூகசேவாசங்கப் போஷகரும்,
திருக்கேதீச்சர சிவானந்த குருகுல பஞ்சாய
உறுப்பினருமாகிய

காரைநகர்,

**சிவஸ்ரீ, ச. கணபதீஸ்வரக் குருக்கள்**

தொகுத்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவூடல்

பரம பதியாகிய சிவபெருமான் உலகினுக்கு அருள் புரியும் நிமித்தம் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிராநின்ற ஸ்தலங்கடோறும் அபக்குவான் மாக்களின் பக்தி நிலைபெறும் பொருட்டு முற்காலத்தில் அப்பகவானாற் செய்தருளப்பட்ட லீலாவினோதங்களை உத்ஸவகாலங்களில் நடத்தவேண்டுமென்று சிவாகமம் விதிக்கிறது. பூர்வத்தில் பரமன் நடத்திய லீலைகள் பலவும் திருவாலவாய், திருவண்ணுமலை, திருச்செங்காட்டங்குடி முதலிய பல தலங்களிலும் நடாத்திக் காட்டப்படுகின்றன. அந்தத்தல புராண சம்பந்தமான லீலைகள் ஆங்காங்கு நடைபெற்றாலும் எல்லாச்சிவாலயங்களிலும் திருக்கல்யாணம், திருநடனம், கன்மவாத இருடிகளைவென்று அநுக்கிரகித்த பிக்ஷாடனோத்ஸவம், திருவூடல் முதலிய உத்ஸவங்களை நடாத்த வேண்டும். உத்ஸவத்தின் ஒவ்வொரு கிரியையும் பஞ்ச கிருத்தியங்களை உணர்த்துவனவாகும். மகோத்ஸவத்தில் அங்குரார்ப்பணம், இரட்சாபந்தனம், துவஜாரோகணம் திருக்கல்யாணம் என்பன சிருஷ்டியை உணர்த்துவன. ஹோமம், பலி எனனுமிவைகள் திதியைக் குறிக்கும். இரதோத்ஸவம்,கிருஷ்ணகந்தோத்ஸவம் என்பன சங்காரத்தை உணர்த்துவன. சூர்ணோத்ஸவம், மௌனோத்ஸவம் என்னுமிவைகள் திரோபவத்தைக் குறிக்கும். சக்தியாத்திரோத்ஸவம் (திருவூடல்) அனுக்கிரகத்தைக் குறிக்கும்.

ஸ்காந்தபுராணத்திலே, ஊடலான தேவியைப் பகவான் லீலாமாத்திரமாகச் சமாதானத்தின் பொருட்டு வேண்டிக்கொண்ட அவசரம் பிரார்த்தனுமூர்த்தமாமென்று அறுபத்து நாலுமூர்த்திபேதங் கூறியவிடத்தில் அறுபத்திரண்டாவது மூர்த்தமாகக் கூறப்பட்டிருக்கின்றது.

---

கிருஷ்ணகந்தம்:— கஸ்தூரி, பச்சைக் கற்பூரம், சாம்பிராணித் தைலம் என்னும் மூன்றையும் சந்தனத்துடன் சேர்த்துச் சுவாமிக்குச் சாத்துதல், இது திரிபுரசங்காரத்தைக் குறிப்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# கணபதி வணக்கம்

திருவாரும் நதிசூழும் கயிலாய நாதருடன்
சேர்ந்து வாழும்
மருவாரும் குழலுமையாள் திருவூடல் தனையுலகில்
மகிழ்ந்து பாட
தருவாரு மானந்த வல்லபையை யிடப்பாகந்
தரித்த முக்கட்
கருவாருந் தொந்திவயிற் றைங்கரன் பொற்பாதங்
கருத்துள் வைப்பாம்

சகல புவனங்களுக்கும் சிருஷ்டி, திதி, சங்கார திரோபவானுக்கிரக கர்த்தாவாகிய பரமசிவன் பிரபஞ்சத்திலே சகல ஆன்மாக்களுக்கும் அனுக்கிரகம் செய்யவேண்டுமென்ற பெருங்கருணையினாலே, பஞ்சகிருத்திய நடனம் செய்தருளுகின்ற இருதயஸ்தானமாகிய சிதம்பரத்துக் கனகசபையின் கண்ணே மார்கழி மாசத்துத் திருவாதிரையிலே மகா அபிஷேக நிவேதனங்கொண்டருளிய உதயகாலத்தில் எழுந்தருளி உள்ளே பிரவேசிக்கும்பொழுது, கங்கைசடைக் கரந்த கள்ளத்தை உணர்ந்த சிவகாமி அம்மையார் முன்னதாகச் சென்று திருக்கோயிற் கபாட பந்தனம் பண்ணி, திருவூடல் கொண்டார்.

இந்த ஊடலைத் தீர்ப்பதற்காகச் சர்வலோக ஏகநாயகரான சிவபிரான் சுந்தரமூர்த்திநாயனரைத் திருவுளம்கொண்ட பொழுது, தம்பிரான் குறிப்பை யறிந்த சுந்தரமூர்த்திநாயனர் சகல விருதுகளுட

பொதுசன நூலகம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org
...ப்பாணம்.

னும் எழுந்தருளி, தம்பிரானாரது திருச்சந்நிதானம் வருகின்றார்.

நம்பியாரூரன் வந்தான் நாவலூர் நம்பி வந்தான்
உம்பரா லறிய வொண்ணு வுண்மைகளுரைப்பான் வந்தான்
செம்பொனுல் மதில்கள் சூழ்ந்த திகழ் செல்வத் திருவாரூரில்
தம்பிரான் ரோழன் வந்தான் என்றன தாரை சின்னம்.

சுந்தரர் சுவாமி சந்நிதானத்தில் வணங்குதல்.
தேவாரம் (பண்: திருநேரிசை)

விண்ணினார் விண்ணின்மிக்கார் வேதங்கள்விரும்பி யோதப்
பண்ணினார் கின்னரங்கள் பத்தர்கள் பாடியாடக்
கண்ணினார் கண்ணினுள்ளே சோதியாய் நின்ற வெந்தை
மண்ணினார் வலங்கொண்டேத்து மாமறைக் காடனாரே.

பரமகாருண்யராகிய சுவாமி சுந்தரமூர்த்திநாயனாருக்கு நிகழ்ந்தவைகளை அருளிச்செய்து, அம்மையாரது திருவுடலைத் தீர்க்கும்படி ஆக்ஞாபித்து அனுப்பும்பொழுது அவர் சிவசந்நிதியிலே விண்ணப்பஞ் செய்து ஓதும் தேவாரம்:-

(பண்:- கொல்லிக்கௌவாணம்)

பத்தூர்புக் கிரந்துண்டு பலபதிகம்பாடி
பாவையரைக் கிறிபேசிப் படிறுடித் திரிவீர்
செத்தார்த மெலும்பணிந்து சேவேறித் திரிவீர்
செல்வத்தை மறைத்துவைத்தீ ரெனக்கொருநா
[ளிரங்கீர்
முத்தார மிலங்கிமிளிர் மணிவயிரக் கோவை
யவைபூணத் தந்தருளி மெய்க்கினிதா நாறும்
கத்தூரி கமழ்சாந்து பணித்தருள வேண்டுங்
கடனாகைக் காரோணம் மேவியிருந் தீரே.

இந்தத் தேவாரத்தைச் சுந்தரமூர்த்தி நாயனார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவசந்நிதானத்திலே விண்ணப்பம் செய்தவுடன் சர்வானுக்கிரகராகிய சுவாமி சுந்தரமூர்த்தி நாயனுருக்கு அருள்செய்து, பார்வதிதேவியாரது ஊடல் மட்டுமல்ல, சுங்காதேவிக்கும் நாம் வெறுப்பானேனும் என்றும், பட்சபாதமில்லாமல் இருவரையும் சமமாகவே எண்ணுவோமென்றும் சொல்லிவிடுக்க, சுந்தரமூர்த்திநாயனுர் சர்வ உலகநாயகியாகிய பார்வதிதேவியார் சந்நிதானஞ்சென்று விண்ணப்பஞ்செய்து ஓதும் தேவாரம்:-

(பண்:- திருநேரிசை)

ஒருத்திதன் றலைச்சென்ருளைக் கரந்திட்டா னுலகமேத்த
ஒருத்திக்கு நல்லனுகி மறுப்படுத்தொளித்து மீண்டே
ஒருத்தியைப் பாகம்வைத்தா னுணர்வினு லையமுண்ணி
ஒருத்திக்கு நல்லனல்ல னெற்றியூ ருடையகோவே.

இந்தத் தேவாரத்தைச் செவிமடுத்தருளிய மலையரசன் புத்திரியாகிய உமாதேவியார் சுந்தரமூர்த்தி நாயனுருக்குத் திருவுளம் பற்றலாவது:-

"பார்வதியார் ஊடல்மட்டுமல்ல, கங்காதேவிக்கும் வெறுப்பானே மென்றும், இருவரையும் சமமாக எண்ணுவோமென்றும்" புகன்றதாகச் சொன்னீர். "நீரும் நல்ல புத்திமானே! உமது கர்த்தாவும் பெரியரேயாம், இவைகள் எல்லாம் உங்களுக்கே செல்லும்" என்று பாங்கியரும் தாமுமாக ஆட்சேபஞ் செய்து வெளியே செல்க என்றதும்,

சுந்தரமூர்த்திநாயனுர் சர்வஞ்ஞராகிய சுவாமி சந்நிதானத்திலே சென்று நடந்தவற்றை விண்ணப்பம் செய்து ஓதும் தேவாரம்:-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பண்:- திருநேரிசை)

கங்கையைச் சடையுள்வைத்தார் கதிர்பொறியரவும்வைத்தார்
திங்களைத் திகழவைத்தார் திசை திசை தொழவும் வைத்தார்
மங்கையைப் பாகம்வைத்தார் மான்மறி மழுவும்வைத்தார்
அங்கையு ளனலும்வைத்தா ரையனை யாறனாரே.

தேவாரம் (பண்:- சீகாமரம்)

மங்கை வாணுதன் மான்மனத்திடை வாடியூட மணங்கமழ் சடைக்
கங்கையா ளிருந்த கருத்தாவதென்னை கொலாம்
பங்கயமது வுண்டு வண்டிசை பாட மாமயி லாட விண்முழ
வங்கையா லதிர்க்கும் ஆமாத்தூ ரம்மானே.

இந்தத் தேவாரங்களைச் சுவாமி சந்நிதியிலே விண்ணப்பம் செய்யக் கேட்டருளிய பரமேசுவரன் சுந்தரமூர்த்திநாயனாருக்குத் திருவுளம்பற்றியருளுவது:-

முன்னொருகாலத்திலே உமக்கும் பரவையாருக்கும் உள்ள ஊடலை நாமல்லவா தீர்த்துவைத்தோம். நீர் எந்தவகையினாலும் பார்வதிதேவியாரது ஊடலைத்தீர்த்து, பார்வதிதேவியாரை நம்மிடம் அழைத்து வாருமென்று ஆக்ஞாபித்தபொழுது,

சுந்தரமூர்த்தி நாயனார் மலையடிவாரங்களிலே தவம்செய்துகொண்டிருக்கும் முநிசிரேட்டர்களாகிய ரிஷிகளிடத்தில் சென்று கூறியதாவது:-

சர்வானுக்கிரக பதியாகிய பரமேசுவரனுக்கும் உலகரட்சணியாகிய பார்வதி தேவியாருக்கும் ஊடல் ஏற்பட்டதால் சுவாமியின் கட்டளைப்படி ஊடலைத் தீர்க்க பார்வதியம்மையார் யாம் ஓதுவதை அங்கீகரிக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றுரில்லை. அடியேன் இருவரது வெறுப்புக்கும் ஆளாகின்றேன். வேதசிரசுகளை ஆராய்கின்ற நீங்கள் இதற்கு ஒரு உபாயம் சொல்லவேண்டும் என முறையிட, முனிபுங்கவர்கள் சுந்தரமூர்த்தி நாயனுரைப் பார்த்து அருள்கூர்ந்து கூறுவது:-

உமக்கும் பரவைநாச்சியாருக்கும் உண்டான ஊடலைத்தீர்க்க சர்வாந்தரியாமியாகிய சுவாமியைத் தூதுவிட்ட மகாத்துமாவே! எங்களுக்கு இதற்கு உபாயம் தெரியாது, நீர்தானே ஏற்ற உபாயம் கண்டு தீர்த்துவைக்கவேண்டும் என்று கூறிவிட, சுந்தரமூர்த்திநாயனுர் சர்வானுக்கிரக காரணியாகிய உமாதேவியார் சந்நிதானஞ்சென்று ஓதும் தேவாரம்

## திருவிருத்தம்

கற்ருர் பயில்கட லுகைக்கா ரோணத்தெங் கண்ணுதலே
விற்ருங் கியகரம் வேனெடுங் கண்ணி வியன்கரமே
நற்ரு ணெடுஞ்சிலை நாண்வலீத் தகர நின்கரமே
செற்ருர் புரஞ்செற்ற சேவகமென்னை கொல் செப்புமினே

இந்தத் தேவாரத்தை உமாதேவியார் கேட்டருளிச் சுந்தரமூர்த்திநாயனுரைப் பார்த்து பாங்கிமாருந் தாமுமாகக் கூறுவது:- கேளும் சுந்தரரே! நீர் கூறியவைகள் யாவும் சரிதான். திரிபுரதகனம் செய்தவீரம் என்னுடையதென்கிறீர், அதுவுமன்றி பிரம, விஷ்ணு ருத்திரன், மகேசுவரன், சதாசிவன் என்கின்ற பஞ்சகர்த்தாக்களாலும் ஆகிற பஞ்சகிருத்தியத்தை என்னுல் ஆகவேண்டுமென்றும் சொல்லுகிறீரே, இது உமக்கும் உமதுகர்த்தாவுக்கும் தெரியாததல்லவே; என்று ஆட்சேபித்து போம்! போம்! என்று சொல்லிவிட்டார்கள்.

தேசிய நூலகம் மாநகர நூலக சேவை யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுந்தரமூர்த்திநாயனுர் சுவாமி சந்நிதானம் சென்று விண்ணப்பம் செய்து ஓதும் தேவாரம்:

(பண் கொல்லிக் கௌவாணம்)

பூண்பதோர் இளவாமை பொருவிடையொன் றேறிப்
பொல்லாத வேடங்கொண் டெல்லாருங் காணப்
பாண்பேசிப் படுதலையிற் பலிகொள்கை தவிரீர்
பாம்பினொடு படர் சடைமேல் மதிவைத்த பண்பீர்
வீண்பேசி மடவார்கை வெள்வளைகள் கொண்டால்
வெற்பரையன் மடப்பாவை பொறுக்குமோ சொல்லீர்
காண்பினிய மணிமாடம் நிறைந்த நெடு வீதிக்
கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரே.

இந்தத் தேவாரத்தைச் சுந்தரமூர்த்திநாயனுர் சர்வானுக்கிரகபதியாகிய சிவசந்நிதானத்திலே விண்ணப்பம் செய்தபொழுது ந்தரமூர்த்தி நாயனுருக்குத் திருவருள் நோக்கம் புரிந்து பரமகருணுமூர்த்தியாகிய சுவாமி, சுந்தரரே, அவ்வாறே கங்கையைச் சடாபாரத்திலே சுவறச் செய்கின்றேம். பார்வதி தேவியாரது ஊடலை எதுவிதத்திலும் தீர்த்து வாருமென்று சுந்தரமுர்த்திநாயனுருக்கு ஆக்ஞாபிக்க, சுந்தரமூர்த்திநாயனுர் உலகமாதாவாகிய பார்வதி தேவியாரது திருச்சந்நிதானம் சென்று,

''சர்வமங்கள மாங்கல்யே: சிவே சர்வார்த்த சாதகே:
சரண்யே த்ரியம்பகே கௌரீ: நாராயணி நமஸ்துதே,

என்று, விண்ணப்பத்தைத் திருச்செவி சாய்த்தருள வேண்டுமென அஞ்சலியஸ்தராய் ஓதும் தேவாரம்:

பண்–நேரிசை

கூடினு ருமைதன்னேடே குறிப்புடை வேடங் கொண்டு
சூடினுர் கங்கையாளைச் சுவறிடு சடையார் போலும்
பாடினுர் சாமவேதம் பைம் பொழியிற் பழனே மேயார்
ஆடினுர் காளிகாண வாலங்காட் டடிகளாரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று இந்தத் தேவாரத்தைச் சுந்தரமூர்த்தி நாயனார் விண்ணப்பஞ்செய்துகொள்ள, பார்வதிதேவியார் தேவாரத்தைக் கேட்டவுடனே மகிழ்ச்சிஇல்லாதவராய்க் கூறுவது:-

என்னை ஒருபாகத்தில் வைத்தார் என்றீர். அவளைச் சடையுளே ஒளித்தார் என்றீர், ஆகையால் அவள் என்னிலும் விசேடமுடையவளாயிற்றே, உமது கர்த்தாவுடைய பராக்கிரமத்தை நீரே வியந்துகொள்ளும்! என்று ஏளனம்பண்ணி இவ்விடத்தே நில்லாது போகும்படி சொன்னார்கள்.

அப்பொழுது சுந்தரமூர்த்திநாயனார் கருணைக் கடலாகிய சிவசந்நிதியை யடைந்து ஓதும் தேவாரம்.

(பண்:- திருநேரிசை)

**கங்கைநீர் சடையுள்வைக்கக் காண்டலு மங்கையூடத்**
**தென்கையான் றேர்கடாவிச் சென்றெடுத் தான்மலையை**
**முன்கைமா நரம்புவெட்டி முன்னிருக் கிசைகள்பாட**
**அங்கைவா ளருளினானூர் அணிமறைக் காடுதானே,**

(பண்:- கொல்லிக்கெளவாணம்)

**தூசுடைய வகலல்குல் தூமொழியா ளூடல்**
**தொலையாத காலத்தோர் சொற்பாடாய் வந்து**
**தேசுடைய விலங்கையர்கோன் வரையெடுக்க வடர்த்துத்**
**திப்பியகீ தம்பாடத் தேரொடுவாள் கொடுத்தீர்**
**நேசமுடை யடியவர்கள் வருந்தாமை யருந்த**
**நிறைமறையோ ருறைவீழி மிழலைதனில் நித்தல்**
**காசருளிச் செய்தீரின் றெனக்கருள வேண்டும்**
**கடனாகைக் காரோணம் மேவியிருந் தீரே**

இந்தத் தேவாரங்களைச் சுந்தரமூர்த்திநாயனார் கயிலாசபதியாகிய சிவபிரான் சந்நிதியிலே விண்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ணப்பஞ்செய்து அடியேனுக்கு எம்பெருமாட்டியின் இந்த ஊடலைத் தீர்த்துக்கொள்ள முடியவில்லையே என்று மனவருத்தத்துடன் சொல்ல, சர்வானுக்கிரக கர்த்தாவாகிய சிவபெருமான் சுந்தரமூர்த்திநாயனு ருக்குத் திருவுளம் பற்றியருளுவதாவது:-

முன்னொருகாலத்தில் திருக்கயிலையில் நமக்கும் பார்வதிதேவியாருக்கும் ஊடல் உண்டாகி அநேக காலம் தீராமலே இருந்தபொழுது, இராவணன் கயிலாசபர்வதத்தைப் பெயர்த்தெடுக்க. அதனால் அசைவுண்டாக, அப்பொழுது பார்வதிதேவியார் அஞ்சி ஊடலை ஒழித்து நம்மைத் தழுவிக்கொண்டார். அச்சமயம் நாம் பெருவிரலாலூன்ற இராவணன் உடல் நெரிந்து வருந்திக்கொண்டிருந்தபொழுது, கைலைப் பிரதக்ஷிணம் செய்துகொண்டுவந்த நாரத மகாமுனிவர், இராவணனைப் பார்த்து, "இராவணா, நீ எம்பெருமானுக்கு மகா அபராதத்தைச் செய்துவிட்டாய். இதைத் தீர்த்துக்கொள்ளும் உபாயம் சொல்லுகிறேன், கேட்பாயாக; நமது பெருமான் சாமகானப் பிரியர். நீ சாமவேதத்தை யாழிசையோடு சேர்த்துப் பாடினால், இறைவர் சகல அநுக்கிரகங்களையும் செய்தருளுவர்" என்று கூறிச் சென்றார். இராவணன் அவ்வாறே தன் சிரங்களில் ஒன்றைக் கிள்ளி, கரங்களில் ஒன்றை முரித்து, யாழமைத்து, சாமகானஞ் செய்ய, அதைக் கேட்டு மனமகிழ்ச்சிகொண்ட உமாதேவியார் அவனுக்கு அருள்செய்யும்படி வேண்டிக்கொள்ள, அந்த வேண்டுகோளுக்கிணங்கி இராவணனுக்கு அனுக்கிரகித்தோம். இப்பொழுதும் சாமகானஞ்செய்யின் ஊடல்தீர்ந்து மகிழ்ச்சியடைவாரென்று திருவாய் மலர்ந்து சாமவேதத்தைக் கூறியருளினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறே சுந்தரமூர்த்திநாயனார் பார்வதிதேவியார் சந்நிதானம் சென்று ஓதும் சாமவேதம்:-

சுந்தரமூர்த்திநாயனார் பாடிய சாமவேதகானம் பார்வதிதேவியாருடைய திருச்செவிகளில் சார்தலும் தமக்கு அபின்னமாயுள்ள இறைவருடன் தாம் ஊடுவதும் கூடுவதும் உலகிலுள்ள ஆன்மாக்கள் பொருட்டே என்பதை உணர்ந்து, அப்பெருமானுடைய பெருமையை நினைந்து "ஊரன் மற்றியாவர்க்கும் ஊதியமாந்" தன்மையைத் திருவுளத்தடைத்து ஊடலை ஒழித்துத் தமது நாயகரது இடப்பாகத்தையடைந்து தழுவிக்கொண்ட சமயத்தில் தம்பிரான் தோழராகிய * சுந்தரமூர்த்திநாயனார் திருச்சந்நிதானத்தில் ஓதும் தேவாரம்:-

(பண்: திருநேரிசை)

சூடினார் கங்கையாளைச் சூடிய துழனி கேட்டங்
கூடினா ணங்கையாளு மூடலை யொழிக்க வேண்டிப்
பாடினார் சாமவேதம் பாடிய பாணியாலே
ஆடினார் கெடிலவேலி யதிகைவீ ரட்டனாரே.

என்று இந்தத் தேவாரத்தைச் சுந்தரமூர்த்திநாயனார் சர்வானுக்கிரக சச்சிதானந்த சிற்சபேச நடராஜப் பெருமானுக்கும், சர்வலோக மாதாவாகிய சிவகாமி அம்மையாருக்கும் விண்ணப்பஞ்செய்ய, அப்போது சிவபெருமான் சகல ஆத்மாக்களுக்கும் பெத்த முத்திகளை அருள்செய்தற்பொருட்டு, ஸ்ரீபஞ்சாக்ஷரமே திருமேனியாகக் கொண்டு, பஞ்ச கிருத்தியத் திருநடனத்தை எந்நாளும் கண்டுகளிக்கும்

* சுந்தரவுருக் கொண்ட இறைவனின் சாயாரூபமே வன்றொண்டப் பெருமானாதலாலும், தம்பிரான்றோழர் என்றும், சகமார்க்கமாகப் பக்தி செய்தாரென்றும், ஓதப்படுவதனாலும் உலகியலில் சிநேகிதரைக்கொண்டே அந்தரங்க காரியங்களை முடித்துக்கோடல் வழக்காதலாலும், நன்றி செய்தாரொருவர்க்குச் சந்தர்ப்பம் வாய்த்தபோது எத்தனை கஷ்டம் வந்தெய்தினும் பின்வாங்காது பிரதியுபகாரம் செய்து தீரவேண்டுமென்பதை அறிவுறுத்தும் பொருட்டும் சுந்தரமூர்த்திநாயனார் அழைக்கப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமாதேவியார், ஆன்மாக்கள் பொருட்டுக்காண இயற்றியருளினார். அஃதெவ்வாறெனில்:

டமருகமேந்திய திருக்கையினால் சிருஷ்டித் தொழிலையும், குஞ்சிதபாதமேலமைத்த திருக்கையினால் காத்தற்றொழிலையும், அக்கினியேந்திய திருக்கையினால் சங்காரத் தொழிலையும், முயலகனை அழுத்திய திருவடியினால் மறைத்தற்றொழிலையும், தூக்கிய திருவடியினால் அனுக்கிரகத்தையும் செய்தருளுவர். எல்லா ஆத்மாக்களையும் அநாதியாகவே பந்தித்துள்ள பாசங்களை நீக்கி முத்தியின்பம் அளிக்கும் பொருட்டே திருநடனம் செய்யப்படுவது. அருள்வடிவாகிய உமாதேவியார் பக்தானுக்கிரககாரணார்த்தம் ஸ்ரீ பஞ்சாட்சர விளக்கமாகிய அவ்வானந்தத் திருநடனத்தை வாமபாகத்தே நின்று என்றும் தரிசிப்பர்.

இன்னும் ஸ்ரீ பஞ்சாக்ஷரமே அங்கமாகக் கொண்ட சிவ சாதாக்கிய, அமூர்த்திசாதாக்கிய, மூர்த்திசாதாக்கிய, கர்த்திருசாதாக்கிய, கர்மசாதாக்கியங்களைந்தனுள் ஒன்றாகிய அமூர்த்தி சாதாக்கியத்திற் றோன்றி, பிரபஞ்சானுக்கிரகத்தின் பொருட்டு சின்முத்திரையுடன் தக்ஷிணாமூர்த்தமாக வீற்றிருந்து, சனக, சனந்தன, சனாதன, சனற்குமாரரென்னும் மகா யோகிகள் நால்வருக்கும், உலகத்தில் தாம்தாம் ஈட்டிய நல்வினை தீவினைகளுக்கீடாக அடையும் நால்வகைத் தோற்றம், எழுவகைப்பிறப்பு, எண்பத்துநான்கு நூறாயிர யோனிபேதம், கொண்ட சர்வ ஆன்மாக்களுக்கும் நிக்கிரகானுக்கிரக கர்த்தாவாய் சகல வேத ஆகமப் பொருள்களையும் அருள் செய்வர் என்றறிக.

கற்பனை கடந்த சோதி கருணையே யுருவ மாகி
யற்புதக் கோல நீடி யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோம மாகுந் திருச்சிற்றம் பலத்து ணின்று
பொற்புட னடஞ்செய் கின்ற பூங்கழல் போற்றி போற்றி.

திருச்சிற்றம்பலம்.

---

| | | |
|---|---|---|
| சிவசாதாக்கியம் | – | சிவலிங்கம் |
| அமூர்த்திசாதாக்கியம் | – | நடராஜர் |
| மூர்த்திசாதாக்கியம் | – | சோமஸ்கந்தர் |
| கர்த்திருசாதாக்கியம் | – | சந்திரசேகரர் |
| கர்மசாதாக்கியம் | – | ஸ்ரீபலிநாயகர் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# ஆதிரை விழவும் அம்பா ஆடலும்

ஸ்ரீமத் சி. சுப்பிரமணிய தேசிகர், காரைநகர்.

ஆதிரை விழவு தனுமாதத்தில் பூரணையை யடுத்துவரும் திருவாதிரையை முடிபாகக் கொண்டு அதற்குப் பத்து நாட்களுக்குமுன் தொடங்கி நடத்தப்படுவதாகும். ஒவ்வொரு மாதமும் திருவாதிரை வருமாயினும் உஷத்காலமாகிய தனுமாதத்தில் வருவது சிறப்புடையதாகும். திருவாதிரை நாளுக்கு உருத்திரமூர்த்தியே அதிதேவராதலால் அந்நாளில் அப்பெருமானுக்கு அபிஷேக ஆராதனைகள் செய்வது விசேஷமாகும்.

எங்களது ஓராண்டுக்காலம் தேவர்களுக்கு ஒரு நாளாகும். அதில் மகரமாதம் முதல் மிதுனமாதம் முடியவுள்ள ஆறுமாதங்களும் தேவர்களுக்குப் பகற் காலமாகும். கர்க்கடக மாதம் முதல் தனுமாதம் முடியவுள்ள ஆறுமாதங்களும் இராக்காலமாகும். ஆகவே எங்களது ஒவ்வொரு மாதமும் தேவர்களுக்கு ஐவைந்து நாளிகைக்காலமாம். இம்முறைமையில் தனுமாதம் தேவர்களுக்கு உஷத்காலமாகிய புலரிக் காலமாம். புலரிக்காலம் ஸ்நானம் சந்தியாவந்தனம் தேவ வழிபாடுகள் செய்வதற்குச் சிறப்புடையகாலமாகும். இதுபற்றியே சைவாலயங்கள் எல்லாவற்றிலும் தனுமாதம் முழுவதும் புலரிக்காலத்தில் விசேடமாக அபிஷேக ஆராதனைகள் செய்யப்படுகின்றன. இதனுல் தனுமாதத்தில் வரும் திருவாதிரை சிறப்புடையதென்பது இனிது விளங்கும்.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.
Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஆதிரை விழவு சிவபெருமானுக்குப் பொதுவகை யால் சிறந்ததாயினும் அப்பெருமானது அருள திரு மூர்த்தங்களுள் நடராஜ மூர்த்திக்கே மிகவும் சிறப் புடையதாகும். இவ்விழாவில் ஒன்பதாம் திருநாள் தேர்த்திருவிழாவின் பின் அன்று இரவு பதினெட்டு நாழிகையின் மேல் இருபத்துநான்குநாழிகைவரையான காலத்தில் திருவாதிரையில் செய்யப்படும் விசேட அபிஷேகத்தினைத் தரிசிப்பதும், அதன்மேல் சூரிய உதயத்துக்கிடையில் செய்யப்படும் விசேட ஆராதனை யைத்தரிசிப்பதும் கிடைத்தற்கரியபெரும்சிவ புண்ணி யப்பேறுகும். திருவாதிரையைக் குறிப்பதாகிய ஆத்ரா என்னும் வடமொழி நனைதல், ஈரமாதல், முழுகுதல் எனப்பொருள் தருதலால் அந்நாளில் இறைவர்க்கு அபிஷேக ஆராதனைகள் செய்தல் விசேடமுடைய தாயிற்று.

திருவாதிரைக்காலம் விழாக்காலம் மாத்திரமன்றி இறைவர்க்குரிய விரதகாலமுமாகும். அதில் முன் ஒன் பது நாளும் ஒருபொழுது உணவும், பத்தாம் நாள் திருவாதிரையில் உபவாசமும் கொள்ளவேண்டியது விதியாகும். அன்றியும் இவ்வாதிரை விழாக்காலம் இறைவியாகிய கௌரிதேவிக்குரிய விரதகாலமு மாமெனக் காரணாகமங் கூறுகின்றது.

மாதங்கள் சௌரமாதம் சாந்திரமாதம் என்னும் வகைகளையுடையன. சௌரமாதம் சூரியன் சம்பந்த மாகக் கொள்ளப்படுவது. அது சூரியன் மேடம் முத லிய பன்னிரண்டு இராசிகளிலும் காணப்படும் காலங் களாகிய மேடமாதம் இடபமாதம் முதலிய பன்னி ரண்டு மாதங்களுமாம். சாந்திரமாதம்- சந்திரன் சம்பந்தமாகக்கொள்ளப்படுவது அது அமாவாசை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யின்போது சூரியனுடன் நின்ற சந்திரன் சூரியனை விட்டு விலகிச்சென்று மீட்டும் சூரியனைவந்தடையும் வரையுள்ள நாளொருமாதமாகக் கொள்ளப்படுவதாம். இம்முறையில் மீனமாதபூர்வபக்கப் பிரதமைமுதல் அடுத்த மேடமாத அமாவாசை முடியவுள்ள சைத்திரமும் இவ்வாறே அடுத்தமாதங்களிலும்பூர்வபக்கப் பிரதமைமுதல் அடுத்த மாதங்களில் வரும் அமாவாசைமுடிய உள்ளனவாகிய வைசாகமும், ஜேஷ்டமும், ஆஷாடமும், சிராவணமும், பாத்திரபதமும், ஆசுவினமும், கார்த்திக்கியமும், மார்க்கசீரிஷமும், புஷ்யமும், மாகமும்; பால்குனமும் ஆகிய பன்னிரண்டு காலப்பகுப்புகளுமாம்.

இவ்விருவகை மாதங்களுள் சௌரமாதத்தில் மகோத்சவங்களும் திருவாதிரை சிவராத்திரி என்னும் விசேட தினங்களும், சிராத்ததிதிகளும் கொள்ளப்படும். சாந்திரமாதத்தில் நவராத்திரி, கந்தசஷ்டி, விநாயகஷஷ்டி, முதலாய பெரும்பாலான விரதங்கள் கொள்ளப்படும்.

திருவாதிரைக்கு சௌரமாதமாகிய தனுமாத சம்பந்தம் நியதியாகக் கூறப்பட்டிருத்தலால், அங்ஙனம் கொள்ளும்போது, தனுமாதத்தில் பூரணை முன்னும் அமாவாசை பின்னும் வருமாயின் அம்மாதத்தில் அமாவாசை முடிய உள்ள மார்க்கசீரிஷ மாத சம்பந்தமும் திருவாதிரைக்கு உளதாகும். அங்ஙனமன்றித் தனுமாதத்தில் அமாவாசை முன்னும் பூரணை பின்னும் வருமாயின் அம்மாதத்தில் அமாவாசையின் பின் பூர்வபக்கப் பிரதமையில் தொடங்கும் புஷ்ய மாதசம்பந்தமும் திருவாதிரைக்கு உளதாகின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றது. மார்க்கசீரிஷ மாதத்திலோ புஷ்யமாதத்திலோ வருதல் திருவாதிரைக்கு நியதியன்று. எதிலும் வரலாம். ஆனால் தனுமாத சம்பந்தம் திருவாதிரைக்கு நியதியாகும்,

இவ்வாருகவே மகாசிவராத்திரியும் கும்பமாதத்தில் வரும் அபரபக்கச் சதுர்த்தசியிலேயே கொள்ளப்படும். அது மாகமாதத்தில் வந்தாலென்ன பால்குணமாதத்தில் வந்தாலென்ன அவை பிரதானமல்ல; சிவராத்திரிக்கு கும்பமாத சம்பந்தமே பிரதானமாதல் காண்க.

அம்பா ஆடல் என்பது, ஐந்துமுதல்பன்னிரண்டு ழுடிபான வயதினையுடைய பேதை,பெதும்பை,மங்கை என்னும் பருவங்களையுடைய கன்னியர்கள் தமக்கு நல்ல கணவர் கிடைக்கும் பொருட்டும், மழை வளம் சிறக்கும் பொருட்டும் ஆதிரைவிழாக் காலத்தில் புலரிக்காலத்தில் எழுந்து ஒருவரை ஒருவர் துயிலெழுப்பிக்கொண்டு, எல்லோரும் சேர்ந்து நீர்க்கரையையடைந்து,நீராடி நியதிமுடித்து, தூய மண்ணினுல் அம்பாளுக்குத் திருப்பாவை வடிவம் அமைத்து அபிஷேக ஆராதனை செய்து வழிபடும் பாவை நோன்பாகும். காரணுகமம் கௌரி நோன்பெனக்கூறுவது இந்த அம்பா ஆடலாகிய பாவை நோன்பையேயெனக் கொள்ளவும் இடமுண்டு.

இந்தநோன்பு பண்டைக்காலத்துச் சங்கத்தண்டமிழ் நூல்களிலும் கூறப்படுகின்றது. பரிபாடல் என்னும் சங்க நூலில் இந்த அம்பா ஆடலைக் கூறுமிடத்து, அது ஆதிரை விழவு தொடங்கும் போது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தொடங்கி, அது நிறைவெய்தும்போது நிறைவெய்துமெனக் கூறப்படுகின்றது. ஆதிரை விழவு ஆலயங்களில் பத்துநாள் நடைபெறும்போது, அம்பாவாடலும் தொடங்கப்பெற்றுக் கன்னியர்களால் பத்துநாள் வரை நடத்தப்படும். ஆதிரை விழவு இறைவரைக் குறித்துச் செய்யப்படுவதாக, அம்பாவாடலாகிய பாவைநோன்பு இறைவியைக் குறித்துச் செய்யப்படுவதால், இறைவர்க்கும் இறைவிக்கும் பிரிவின்மையால், ஆதிரை விழவும் அம்பாவாடலும் ஒன்றற்கொன்று தொடர்புடையனவேயாகும்.

திருவாதவூரடிகள் சிவத்தல யாத்திரையாகச் சென்று, திருவண்ணுமலையில் எழுந்தருளியிருக்கும்போது, அங்கே அண்ணுமலையார்க்கு ஆதிரை விழவு தொடங்கப்பட்டதாக, அப்போது பாவை நோன்பு நோற்கும் கன்னியர்கள் புலரிக்காலத்தில் ஒருவரை ஒருவர் துயிலெழுப்பிக்கொண்டு எல்லோரும் சேர்ந்து நீர்க்கரையையடைந்து, அம்பாளைவழிபடற்காகும் அம்பாவாடலாகியநீராடலைச்செய்து பாவைநோன்புநோற்பதனைக்கண்டனர். கன்னியரின் வழிபாடுகண்ட அடிகள் தம்மையும்அக்கன்னியருள் ஒருவராகச் சேர்த்து அக்கன்னியர் தம்முள் கூறும் கூற்ருகத் திருவெம்பாவையென்னும் திருவாசகப் பகுதியினை அருளிச்செய்தனர்.

அத்திருவெம்பாவையுள் பாவை நோன்பு நோற்கும் கன்னியரின் வழிபாட்டிற்குரிய அம்பாளாகிய பாவையை முன்னிலைப்படுத்தி, கன்னியரின் குறிக்கோளாகிய நல்லகணவரைப் பெறுதலையும் மழைவளம் சிறத்தலையும் சேர்த்து, மற்றும் சைவ சமய உண்மைகள் பலவற்றையும் இயைவித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளிச்செய்திருக்கும் நயம் பெருவியப்பளிப்ப தாகும்.

அடிகள் ஆதிரை விழவுக்கும் அம்பாவாடலுக் கும் உள்ளதொடர்பினைத் திருவுள்ளத்திற் கொண்டே இறைவனையும் இறைவியையும் வழிபாடுசெய்யும் முறையில் திருவெம்பாவையை அருளிச் செய்வாரா யினர். அடிகள் தம்மையும் அக்கன்னியர்களுள் ஒருவராகச் சேர்த்துக்கொண்டுள்ளாரென்பது "ஒரொரு கால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான் சீரொருகால் வாயோவாள்" என்று தொடங்கும் திருப் பாடலால் இனிது விளங்கும். அத்திருப்பாட்டில் குறிக் கப்பட்டபெண் யாரென்பதை உற்றுநோக்குதல் வேண்டும்.

அடிகள் அம்பாவாடலை மார்கழி நீர் எனத் திரு வெம்பாவையுள் அருளிச்செய்திருக்க, பரிபாடலும் மற்றைய சங்கநூல்களும் தைநீர் எனக் கூறுகின் றன. மார்கழி தை என்பன சாந்திரமாதப் பெயர்க ளாகும். தனுமாதத்தில் வரும் ஆதிரைவிழவு அம் மாதத்துள் தொடர்புபடத்தக்க மார்க்கசீரிஷ மாத சம்பந்தமும் சிலபோது உடையதாகலாம். சிலபோது புஷ்யமாத சம்பந்தமும் உடையதாகலாம். ஆனால் ஆதிரை விழவுக்குத் தனுமாத சம்பந்தமே இன்றி யமையாததாகும். ஆதலால் ஆதிரைவிழவுடன் தொடங்கி முடிவடையும் அம்பாவாடலும் மார்க்க சீரிஷ மாதத்திலும் வரலாம்; புஷ்ய மாதத்திலும் வர லாம்; அம்முறைமையில் மார்க்கசீரிஷ மாதத்தில் வந்தபோது மார்கழிநீர் எனவும் புஷ்ய மாதத்தில் வந்தபோது தைநீர் எனவும் கூறப்பட்டதன்றி, அவையிரண்டும் வெவ்வேறானவையல்ல. பரிபாடலுள் கூறப்பட்டவாறு ஆதிரை விழவுடன் தொடங்கி நிறை வெய்தும் அம்பாவாடலையே குறிப்பனவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிர்நோயை அகற்றும் திருவாசகத் தேன்

திரு. க. இராமச்சந்திரன்.
ஆங்கில சமயமஞ்சரி ஆசிரியர், கொழும்பு.

"திருவாதிரை மலர்" என்றதும் எத்தனை விஞ்ஞான மெய்ஞ்ஞானக் கருத்துக்கள் மனதில் எழுகின்றன! இந்து வானூல் சாஸ்திரப்படி இருபத்தேழு நட்சத்திரங்கள் உள. அவற்றுள் "திரு" வென்ற அடைமொழி பெற்றுச் சிறப்புற்றவை இரண்டேயாம்; ஒன்று திருவாதிரை; மற்றையது திருவோணம். முந்தியது சிவபெருமான் சம்பந்தமுடைத்து; "ஆதிரை நாதன்" என்பது பரமசிவத்தின் பழையபெயர்களுள் ஒன்று. அத் தொடர்பில் வந்த தேவிநாமம் "திருவாதிரை நாச்சியார்" என்பதாம். பிந்தியது திருமாலைக் குறிப்பது. திருமாலுக்குரிய பழைய நாமங்களுள் "ஓணப்பிரான்" என்பது முக்கிய இடம்பெறுகின்றது. எனவே, மண்ணுலகில் சைவம், வைணவம் இரண்டுக்குமுரிய பழமைக்கும் மகிமைக்கும் விண்ணுலகிலிருந்து சதாசாட்சி கூறுவதுபோல் அமைந்துள்ளன, குறிப்பிட்ட இரு நட்சத்திரங்களும்.

சைவர்களுக்கு மிக விசேடித்த புனிததினங்களான மாசி சிவராத்திரி, கார்த்திகைத்தீபம், மார்கழித் திருவாதிரை ஆகிய மூன்றும் வானூல் நீதியில் நெருங்கிய தொடர்புடையன.

"ஆதியரு ணாசலப்பே ரற்புதலிங் கத்துருக்கொ
ளாதிநாள் மார்கழியி லாதிரையச்-சோதியெழு
மீசனைமான் முன்னமர ரேத்திவழி பட்டநாள்
மாசிசிவ ராத்திரியா மற்று."

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது ஸ்ரீரமணமூர்த்தியின் திருவாய்மொழி. சிவ பெருமானின் மகேசுவர வடிவங்களுள் முதலாவதான லிங்கோற்பவ மூர்த்தியைக் குறித்து நிற்கும் இந்த நிகழ்ச்சி, ஓர் பிரளய காலத்தில் திருவண்ணுமலையில் பல்லாயிரம் வருஷங்கட்குமுன் பிரமா விஷ்ணு இரு வரின் மயக்கந்தீர்க்க நடந்ததென்பது எமது ஆன் ஞேர் வாக்கு. அதனை இருபதாம் நூற்ருண்டில் உறு திப் படுத்தியது ஸ்ரீரமணரின் வாழ்க்கையும் வாக்கும்.

சைவ சித்தாந்தப்படி ஆண்டவனை அடையும் மார்க்கம் நான்கு படிகளை உடைத்து;சரியை, கிரியை, யோகம், ஞானம். இவை முறையே தாசமார்க்கம், சற் புத்திரமார்க்கம், சகமார்க்கம், சன்மார்க்கம் என அழைக்கப்படும். ஆண்டான் அடிமைத்திறம் முத லில் அடங்கியுள்ளது. இதனை நமக்கு எடுத்துக்காட் டியவர் திருநாவுக்கரசர். தந்தையும் மைந்தனுமாக நிற்றல் இரண்டாவது மார்க்கத்தில் தரப்பட்டுள்ளது; இதனை நிலைநாட்டியவர் திருஞானசம்பந்தர். இறை வனை நமக்குத் தோழனுகக் கருதி வழிபடும் மூன்ரு வது மார்க்கம் சுந்தரரால் விளக்கப்பட்டது. நான்கா வதான சன்மார்க்கம் நாயக-நாயகி நெறியாகும்; அதாவது இறைவனைக் கணவனுகக்கொண்டு ஆன்மா நாயகியாக நின்று அன்பு செய்தல்; இதனை விளக்கி யவர் மணிவாசகர்.

உலகில் தோன்றியுள்ள பல்வேறு சமயங்களின் அடிப்படைக் கொள்கைகளைத் துருவி ஆராய்ந்து பார்த்தால் அவையெல்லாம் ஆரம்பத்தில் அச்சத்தை அத்திவாரமாகக் கொண்டெழும்பிய உண்மை தெற் றென விளங்கும். இந்த அச்சத்தில் சிறிது தாசமார்க் கத்தில் இன்னும் இருக்கவே செய்கின்றது. அடுத்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு மார்க்கங்களில் உரிமைபற்றிய அன்பு படிப்படியாக உயருகின்றது. நான்காவது நெறியில் நாயகனுடைய உடைமைகளையெல்லாம் அனுபவிப்பதோடு, நாயகனையே அனுபவிக்கும் வாய்ப்பும் நாயகிக்குக் கிடைக்கின்றது. எனவே இஃது இரண்டறக் கலந்து இன்புறும் மார்க்கமாகின்றது. மணிவாசகர் தம்பொருட்டும் எம்பொருட்டும் பாடிய திருவாசகமும், சிற்சபேசன் வேண்டுகோளுக்கிணங்கி இயற்றிய திருக்கோவையாரும் இந்தச் சன்மார்க்கத்தை நன்கு விளக்குகின்றன.

"நால்வர் பாடல்கள்" என நாம் இன்று அடிக்கடி கேட்கும் சொற்றொடர் பின்னாளில் தோன்றிய ஒன்றாகும். ஒன்பதாம் நூற்றாண்டில் இயற்றப்பட்டதாகக் கருதப்படும்,

"தேவர் குறளும் திருநான் மறைமுடிவும்
மூவர் தமிழும் முனிமொழியும் - கோவை
திருவாசகமும் திருமூலர் சொல்லும்
ஒருவா சகமென் றுணர்"

என்ற ஔவைப்பிராட்டியாரின் அருள் வாக்கில், மூவர் தமிழ் திருவாசகத்திலிருந்து பிரித்துக் கூறியிருப்பதை உற்று நோக்குக! "கோவை திருவாசகம்" என்னும் இரு நூல்களையும் பிரிக்காது பிணைத்துக் கூறுவதே சைவமரபாகும். நம்பியாண்டார் நம்பி அவர்களால் ஆரம்பத்தில் ஏழு திருமுறைகளாக வகுக்கப்பட்டது மூவர் தமிழ் மாத்திரமேயாம். இதுவும் நமது கவனத்தில் இருக்கவேண்டிய ஓர் பேருண்மையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாசகப் பெருமானின் மகிமையையும், அவர் நமக்குத் தேடிவைத்துப்போன திருவாசகத்தேனின் அருமை பெருமையையும் உணராத தமிழர், சைவர் இருக்கமுடியாது. பிறநாட்டில் பிறந்து, பிறமதச்சார் பில் ஒழுகும் அன்னியர்தாமும் தமிழ்மொழிபயிலும் பாக்கியம் பெறின், திருவாசகத்தின் தனிச்சிறப்பை அறிந்து அதனைப் பாராயணஞ் செய்து பாராட்டவே செய்வர். கலாநிதி G. U போப் அவர்கள், சேர் சாள்ஸ் எலியற் போன்ற மேல்நாட்டு அறிஞர்கள் செய்துள்ள ஆழ்ந்த ஆராய்ச்சியின் பயனுகவே, "திருவாசக மானது உண்மையில் திருவாதவூரடிகளது ஆன்மீக வாழ்க்கையின் சுயசரிதம்; அது சாதி, நிற, மொழி, மதவேறுபாடுகள் எல்லாவற்றையும் தாண்டி, ஆன் மீக சாதகர்கள் சகலருக்கும் தனிப்பட்டமுறையில் நல்வழிகாட்டியாக அமைந்துள்ளது." என்ற பாராட்டு மொழி நம்மவர்களிடையே பரவியதாகும். "திருவாச கத்தில் உருகாதார் ஒருவாசகத்திலும் உருகார்" என்ற பழமொழியில் அடங்கியுள்ள உண்மை பன்மொழிப் புலவர் பலரால் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அவர் களுட் சிலர் திரோதானசுத்தி குறிக்கும் திருப்பள்ளி எழுச்சியையும், வேறுசிலர் முத்திக்கலப்புரைக்கும் பிடித்த பத்தையும் முக்கியமாக அதில் மூன்றும், ஒன்பதாம், பத்தாம் பாடல்களையும் எடுத்துக் காட் டாகக் கூறியுமுள்ளார்கள். திருவாசக ஆராய்ச்சிப் பேருரை ஆசிரியர் பண்டிதமணி நவநீத கிருஷ்ண பாரதியார் அவர்கள் இப்பிடித்த பத்தின் திருப் பாட்டுகள் 7, 8, 4, 5, 9, 6, 3, 1, 2, 10, எனப் பொருளுக்கேற்ப அடைவுறும் என்று அட்டவணை சேர்த்து விளக்கியுள்ள அருமை பண்டிதர்கட்குப் பெரும் விருந்தாகும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாசகத்தைப் பக்தி சிரத்தையுடன் ஓதும் சாதனையை ஆரம்பிக்குமுன் ஒருவர் திருவாதவூரர் புராணத்தைக் கருத்தூன்றிப் படித்தலால் விசேஷ பலனை அடையமுடியும். சென்ற நூற்றாண்டில் நமது சைவப்பாடசாலைகளில் இருந்த கல்விமுறை இதற்குப் பெரிதும் ஆதரவளித்தது. கடவுண்மா முனிவர் திருவாதவூரரின் வாழ்க்கைக் குறிப்புகளை மாத்திரங் கொண்டு அப்புராணத்தை இயற்றவில்லை. திருவாசகத்தேனைப் பருகித் தெவிட்டாது திளைத்த நிலையில் இருந்து கொண்டே அதனை அருளியுள்ளாரென்பதற்கு அவரது நூலில் அகச்சான்றுகள் நிறைய உள. வாதவூரரின் வரலாற்றுச் சுருக்கத்தை அவரது பிறப்பு, வளர்ச்சி மந்திரிப்பதவி, உள்ளத் துறவு, குருவைத்தேடல், சரணாகதி, சைவப்பணி, சிவக்கலப்பு, என்ற எட்டுத் தலைப்பின் கீழ், கீழ்க் கண்ட முதல்வரியுள்ள முனிவரின் ஒன்பது பாடல்களில் அமைத்துவிடலாம்:-

"பொய்ம்மையா மூலகின் மாயப் பொங்கிருளகல<br>வண்ணோர்..."<br>
"தவமெனும் பெரியவித்துட்டங்கியே<br>[யங்குரித்துப்..."<br>
"காதலித் தறஞ்செய்வோர்க்குக் கவசமுங் கண்<br>[ணுமாகி..."<br>
"தீத்திற வினையினாலே சிறைப்படு முயிரை<br>[யெல்லாம்..."<br>
"மற்கடவிலங்கு தன்னால் வளங்கெழு விளவின்<br>[மேவு..."<br>
"மின்னினு நிலைமையில்லா விழுப்பொருள்<br>[யாவும் வேண்டேன்..."

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"திருச்சதக முதலாகச் சிறந்த தமிழறு நூறும்"
"நின்ற புகழ்ப்புலியூரர் நேயமுடன் புடை சூழச்..."
"செய்காட்டுங் கமுகடவித் தில்லையுள்ளார் பொருளென்று..."

சாதாரண மக்களாகிய யாம் மெய்யடியார்களை நம்மினும் வேறுபட்ட மேன்மக்களாகவும், தனிப்பட்ட பெருமக்களாகவும் பேணிப்பணிகின்றோம். ஆனால் அவர்களோ தம்மை நம்மைப்போன்ற சாதாரண மக்களாகவும், இறைவனது அருட்பிரசாதத்தினலேயே தாம் உயர்ந்த நிலையை அடைந்ததாகவும் கருதி, தாம் பெற்ற இன்பம் இத்தரணியோரும் பெறவேண்டுமென்ற கருணை நோக்குடன் பாடியும், போதித்தும் செல்கிறார்கள். சிலவேளைகளில் நம்மிடமுள்ள குறைகள், குற்றங்கள், குணக்கேடுகள் சகலத்தையும் தம்தலைமீது சுமத்திப் பாடிவிடுவதுமுண்டு. இந்தக் கருணைநெறியை மணிவாசகப் பெருமானின் பாடல்களில் பரக்கக் காணலாம். உதாரணமாக சரியை, கிரியை, யோகம் ஆகிய மூன்று படிகளையுந் தாண்டி ஞானநிலையில் நின்று சன்மார்க்கம் உபதேசித்த இப்பெருமான் திருச்சதகம் அறிவுறுத்தல் பதிகத்தில், "ஆமாறுன் திருவடிக்கே அகங்குழையேன் அன்புருகேன்" எனவரும் திருப்பாடலில், சரியைக்குரிய நியமங்களை விடுத்தமையால் தமது பிறப்பு அவமாகி இறப்பை நோக்கி விரைந்து செல்கிறதென்று துயருறுவதைச் சிந்திக்குக.

வேத வேதாந்த உபநிடதங்களின் அத்யாத்ம கருத்துக்களை திருவாசகத்தில் பரக்கக் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீவன் சிவனுடன் இரண்டறக் கலந்தின்புறும் முத்தி நிலையை ஆரம்பத்தில் குறிப்பிட்டோம். இதுவே அத்வைத மார்க்கமும் ஆகும்.

''பொய் கண்டார் காணாப் புனிதமெனும் [அத்துவித
மெய் கண்ட நாதனருள் மேவுநாளெந் நாளோ''

என்ற எந்நாட்கண்ணியில் தாயுமானவர் மெய் கண்டதேவரை அத்வைத நெறிக்கு உயர்ந்த எடுத் காட்டாகப் போற்றுகிறார். அவரது நேர் சீடரான சிவஞான வள்ளலார் (அருணந்தி சிவசாரியருடன் குரு உபதேசம் பெற்றவர்)

''சைவசித்தாந்த மெல்லாம் தானவனாகி நிற்றல்
மையறு வேத சித்தமற்றது நானேயென்னல்
உய்வகைக் கிரண்டு மொன்றே'' யென்று அத்

வைத வேதாந்தமும் வைதிகசைவ சித்தாந்தமும் நாம் உய்வடைவதற்கு ஒரேவித வழிகாட்டிகள் என வற்புறுத்தியுள்ள பெற்றியை உற்றுநோக்குக.

இனி, ''பரம்பொருளே எல்லாமாய்த் தோன்று கிறது; ''சீவனும் பரம்பொருளும் வேறல்ல''; ''பரம் பொருள் நிர்க்குணமானது'' என்னும் அத்வைத வேதாந்தக் கொள்கைகளை ஆதரிக்கும் திருவாசகப் பகுதிகளைச் சிறிது ஆராய்வோம். ஆரம்பத்தில் உள்ள சிவபுராணத்திலேயே, ''இன்பமும் துன்பமு மில்லானே உள்ளானே,அன்பருக் கன்பனே யாவையு மாயல்லையுமாஞ் சோதியனே துன்னிருளே''; ''பொய் யாயினவெல்லாம் போயகல வந்தருளி''; ''மெய்ஞ்

1078
118301

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே"; "போக்கும் வரவும் புணர்வு மிலாப் புண்ணியனே" முதலாய அருங்கருத்துக்களைக் காணலாம். கோயிற்றிருப்பதிகத்தில் "நீயலாற் பிறிது மற்றின்மை...ஒன்று நீயல்லை யன்றி ஒன்றில்லை"; திருத்தோணோக்கத்தில், "பூத்தாரும் பொய்கைப் புனலிதுவேயெனக் கருதிப் பேய்த்தேர் முயக்குறும் பேதை குணமாகாமே தீர்த்தாய்"; திருச்சதகத்தில் "ஈசனே நீயல்லதில்லை இங்குமங்கும் என்பதும், பேசினேனோர் பேதமின்மை"; கண்டபத்தில், "சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கியெனை யாண்ட"; அச்சோப் பதிகத்தில், "சித்தமலமறுவித்துச் சிவமாக்கியெனை யாண்ட"; திருவண்டப்பகுதியில், "சொற்பதங் கடந்த தொல்லோன் காண்க, சித்தமுஞ்செல்லாச சேட்சியன் காண்க"; "நூலுணர்வுணரா நுண்ணியோன் காண்க" எனப் பல்வேறு ஆதாரங்களைக் காணலாம். விரிவஞ்சி இத்துடன் நிறுத்துகின்றோம்.

கடவுண்மா முனிவர்போல் திருவாசகத்தேனைப் பருகித் திளைத்தவர் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள். அன்னார் சிவஞான வள்ளலார்; கண்ணுடைய வள்ளலார்போல் திருஞானசம்பந்தப் பெருமானைக் குருவாகப் பேணியவர். ஆளுடைய பிள்ளையார் அருள்மாலையில் "சித்தநற் காழி ஞான சம்பந்தச் செல்வமே எனது சற்குருவே!" எனப் போற்றுகிறார். ஒழிவிலொடுக்கம் என்னும் நூலின் பாயிரச் செய்யுளுக்கு வரைந்த விருத்தியுரையில் அக்குருவின் மகிமை மேலும் அவரால் சிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆனால், அருட்பிரகாசவள்ளலார் தமிழ்மொழியில் தோன்றிய தோத்திர நூல்களில் முதலிடத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாசகத்திற்கே அளித்துள்ளார். எனவே, அவரது ஆளுடைய அடிகளை (மாணிக்கவாசகர்) அருள்மாலையிலிருந்து இரு எளிய, இனிய பாடல்களைத் தந்து இக்கட்டுரையை முடிக்கின்றோம்.

''வான்கலந்த மாணிக்க வாசகநின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன்கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை [கலந்தென்
ஊன்கலந்துஉயிர்கலந்துவுவட்டாமலினிப்பதுவே''

''வாட்டமிலா மாணிக்க வாசகநின் வாசகத்தை
கேட்டபொழுதங் கிருந்தகீழ்ப் பறவைச் சாதிகளும்
வேட்டமுறும் பொல்லா விலங்குகளு மெய்ஞ்ஞான
நாட்டமுறு மென்னிலிங்கு நானடைதல் வியப்பன் [றே!''

---

Saivism is the real religion of the South of India and of north Ceylon; and the saiva siddhantha Philosophy have and deserves to have far more influence than any other. The fifty one poems are recited daily in all the great saiva temples of South India and are on every one's lips.

– Dr. G. U. Pope

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மார்கழித் திருவாதிரை

மார்கழி மாதம் என்பது மிருகசீரிட நட்சத்திரமும் பௌர்ணமித் திதியும் கூடும் மாதமாம். இது மார்க்க சீர்ஷம் எனவும் வழங்கப்படும். சூரியோதய காலம் முதல் மறுபடியும் சூரியன் உதயமாகும்வரை உள்ளகாலம் ஒருநாளாம். ஒரு மகர சங்கராந்தி தொடங்கி மற்றொரு மகர சங்கராந்தி வரையில் உள்ளகாலம் ஒரு வருஷம். இந்த மானுட வருடம் ஒன்று தேவர்களுக்கு ஒருநாளாம். தை மீ தொடக்க முதல் ஆனி இறுதியாக ஆறுமாதம் அவர்க்குப் பகல், அது உத்தராயணம். ஆடித் தொடக்க முதல் மார்கழி இறுதியாக உள்ளகாலம் இரவு, அது தக்ஷிணாயனம். அறுபது நாளிகையுள்ள தேவதினத்தில் ஒவ்வொருமாதமும் ஐவைந்து நாழிகையாம் தேவர்களுடைய நாளில் உள்ள பிராஹ்மீ முகூர்த்தமே மார்கழிமாதம். அது புலரிக்காலம் எனப்படும். இந்தப் புலரிக்காலத்திலே தேவர்கள் யாவரும் தேவதேவராகிய மகாதேவரைத் தியானித்து வழிபாடாற்றுவர். மக்களும் அப் புலரிக்காலத்திலே எழுந்து நாட்கடன் ஆற்றி இறைவரை வழிபடுவர். "வைகறைத் துயிலெழு" என்பது ஔவையார் திருவாக்கு. சூரியன் உதிப்பதற்கு ஐந்துநாளிகைக்குமுன். நித்திரைவிட்டு எழுந்து காலைக்கடன்களை முடித்து ஸ்நானம், சந்தியாவந்தனம், கடவுட்பூஜை, செபதியானங்கள், ஆலய வழிபாடு இவைகளைச் செய்வதால் நன்மைகள் உண்டு எனப் பெரியோர் கொண்டனர். "மாதங்களில் மார்கழியாக நான் இருக்கிறேன்" என்பது பகவத் கீதை. ஆதலால், மார்கழிமாதமே மற்றைய மாதங்களிலெல்லாம் சிறப்பானது.

இனி உயிர்கள் எண்ணிறந்தன. அவை என்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளன, இயல்பாகவே மலச்சார்புடையன. செம்பிற் களிம்பும் அரிசியில் தவிடும்போன்றது, ஆணவமலம். உயிர்களை மலக்கட்டினின்றும் நீக்கிப் பேரின்பத்தை அளித்தருளுபவர் இறைவர். ஆன்மாக்கள் உய்யும் பொருட்டே சிவபெருமான் ஐந்தொழில் இயற்றியருளுவர். மலப்பற்றுடைய உயிர்களே பிறந்திறந்து உழல்வன. அவ்வுயிர்களின் பொருட்டே இறைவர் மீண்டும் மீண்டும் ஐந்தொழிலாற்றுவர். மலச்சார் பினீங்கி வீடுபேறு எய்திய உயிர்களுக்குப் பிறப்பில்லை; இறப்புமில்லை. படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பன ஐந்தொழில்கள். அவை வடமொழியில் சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் எனக் குறிக்கப்படும்.

ஐந்தொழிலை முத்தொழிலில் அடக்கியும் கூறுவர். அநுக்கிரகமாவது கட்டறுத்தல்: அது பந்தவிடுதலை ஆதலின் அழித்தல் தொழிலில் அடக்குவர். திரோபவமானது ஆன்மாக்கள் வினைப்பயன்களை அநுபவிக்கும்பொருட்டு கருவிகளுடன் கூட்டி நிலை பெறுவித்தல். முதல்மூன்றும் தனுகரண புவன போகங்களைப் பற்றியன. இறுதியிரண்டும் உயிர்களைப் பற்றியன.

அநுபவவாயிலாக அறிந்த அரியபெரிய உண்மைகளை யாவரும் அறிந்துய்யுமாறு எழுதிவைத்தனர் பெரியோர். அவர் நமக்கெனத் தேடிவைத்த சேம நிதிகளே ஞானசாஸ்திரங்கள். அவைகள் நமக்கு வைப்பு நிதிகளாம். கல்வி அறிவு ஒழுக்கமுடைய நல்லோரே அதனை அநுபவித்துப் பயன்பெறுவர். ஏனையோருக்கு அஃது இயலாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் இறைவனை ஒருவடிவத்தில் இருத்திப் பூசிப்பர். அதன் பொருட்டே மூர்த்திகள் அமைந்தன. மூர்த்திவேறு, மூர்த்திமான் வேறு. கல்லிலும் செம்பிலும் மூர்த்திகளை அமைப்பர். அஃது அறிவுடையோர் அமைத்து வைத்தது. அத்தத்துவம் அறிஞர்க்கே புலனாம். ஏனையோர் உணர்ச்சிக்கு அஃது எட்டாதாம். ஐந்தொழில் செய்தல் சிவபிரானுக்கே உரியது. ஏனைக் கடவுளருக்கு அஃது அடாது "சிவபிரான் ஒருவரே தேவதேவர், மகாதேவர். அவர் ஒருவரே பூசிக்கற்பாலர்," என வேதம் முறையிடுகிறது. அவர் யாரையும் பூசித்திலர். சிவபிரான் வேறொரு தெய்வத்தைப் பூசித்ததாக ஒரு தலமும் இல்லை, வரலாறும் இல்லை. சிவபிரான் ஒருவரே பரமாசாரியர். அது தட்சிணாமூர்த்தவடிவால் தெளிவாம். ஐந்தொழிலுக்கும் உரியர் சிவபெருமானே ஆவர். அது நடராசமூர்த்தத்தால் அறியப்படும். அவர் நடனம் ஆனந்த நடனம். ஐந்தொழில் நடனமும் ஆம், சிவபெருமானது மாகேசுவர வடிவங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு உண்மையை உணர்த்தும். அடியார்கட்கு ஆண்டவன் அருளிய திறங்களை அவை உணர்த்துவன. ஆண்டவன் ஒருவனே அடியார்களுக்குப் பல பல வேடங்கொண்டு அருள் செய்வான். அவ்வேடங்கள் ஒன்றினையொன்று ஒவ்வா. யோகவடிவம், போகவடிவம், வேகவடிவம் என்பன அவை. விரிந்த நூல்களில் அவற்றைக் கண்டு தெளிக.

இனி, இறைவருக்குச் செய்யும் பூசை நித்தியபூசை, நைமித்திக பூசை என இரண்டு வகைப்படும். நாடோறும் செய்யப்படுவது நித்தியபூசை நித்திய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூசையில் உண்டாகும் தாழ்வுகள் தீரச் சிலநாட்கள் மட்டும் சிறப்பாகச் செய்யப்படுவது நைமித்திக பூசை. அப்பூசையே திருவிழாக்கள். மந்திரலோபம், கிரியாலோபம், திரவியலோபம் முதலியன தாழ்வுகள். இத்தாழ்வுகள் தீரக்கழுவாய் உண்டு. அது பிராயச்சித்தம் எனப்படும். மக்கள் அறியாமையால் லோபங்கள் உளவாம். அவை தீரப்பிராயச்சித்தம் செய்து கொள்ளுவர். அறியாமற் செய்த பாவங்கள் பிராயச்சித்தத்தால் தீரும். அதன்பொருட்டே கோயில்களில் திருவிழாக்கள் நடைபெறுவன. திருவிழா நாட்களும் 7, 9, 10, எனப் பலதிறப்படும் இத்தகைய விழாக்களில் ஒன்றுதான் மார்கழித் திருவாதிரை என்பது.

இனி மார்கழி என்பது ஒடுக்கம் நீங்கும் காலம் எனப் பொருள்படும். மா - மாய்தல், மறைதல் அஃதாவது ஒடுக்கம். கழி - கழிதல், நீங்குதல். இறைவன் உயிர்களுக்குத் தனுகரண புவன போகங்களை மாயையில் ஒடுங்கச் செய்து மீளத் தோற்றுவிக்கும் காலத்தை அஃது உணர்த்தும். ஆதிரை என்பது, ஆ - ஆன்மாக்கள், திரை - மறைத்தல். உயிர்களை உலகவாழ்வில் அழுந்தச் செய்தலாம். ஆதிரைநாள் சிவபிரானுக்குரியது. ஓணநாள் திருமாலுக்குரியது. நாண்மீன்களில் இவ்விரண்டுமே திருஎன்னும் அடைமொழியுடையன. மற்றவற்றிக்கு அது இல்லை.

## திருவாதிரை விழா நடைபெறுமுறை:-

ஒடுக்க நீக்கத்தில் மலபற்று நீங்காத உயிர்களை மீளவும் உலக வாழ்வில் அழுத்துதலை உணர்த்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவதே இத்திருவிழாவின் நடைமுறையாம். இத் திருவிழா நாளில் கூத்தப்பிரான் சந்நிதியில் ஒரு பசு நிறுத்தப்படும் அச்செயல் சிவபெருமான் மீண்டும் படைத்தல் ஆகிய சிருட்டித்தொழிலை மேற்கொள் வது ஆன்மாக்கள் பொருட்டேயாம் என்பதை உணர்த்தும். அப்பசு 'காரா'ஞக இருத்தல் கருதத் தக்கது. திணிந்த இருள்போன்ற ஆணவ மலத் தழுந்திய நிலையையுடையன அவ்வான்மாக்கள் எனக்குறிப்பது அது. இறைவன் சந்நிதியிலே அப்பசு வின் முகம் காட்டப்படாமல் அதன் பின்புறத்தைக் காட்டி நிறுத்துவதை நாம் காண்கிருேம். இறைவன் திருவடியின்பத்தை விரும்பாமல் உலக இன்பத்தை யே விரும்பிச் செல்லும் ஆன்மாக்களின் நிலையை அக்குறிப்பு வெளிப்படுத்தும். சந்நிதியில் இறைவர் அருளிய அருட்பேருகக் கருநிறச்சாந்து அணியப் படும். உயிர்களுக்கெல்லாம் இறைவன் மலர்ச்சார்பாகிய உலக வாழ்வைத் தந்தருளுகின்றுர் என்பதை அது குறிக்கும். மலத்திலே ஒடுங்கிக் கிடந்த உயிர்களுக்கு இலறவன் தனு கரணம் முத லியவைகளைப் படைத்துக் கொடுத்தல் களிப்பைத் தரும். ஆகலின், அக்குறிப்பையுணர்த்தவே களி வளங்கப்படும் என்க. திருப்பள்ளியெழுச்சிக்காலமே மார்கழித்திங்களில் வரும் திருவாதிரையாம்.

இனி இறைவன் நம்மனோர்போல உறுப்புக் களைக் கொண்டு தொழில் இயற்றுபவரல்லர். அது சங்கற்ப மாத்திரையால் - சந்நிதி மாத்திரையால் நடைபெறும். இறைவரது அருட்சத்தியால் அனைத் தும் நிகழ்வன ஆம். ஆதிசத்தி எனவும் அச்சத்தி பெயர்பெறும். தமிழிலே ஒரு சொல் அதன் முத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லெழுத்தைக்கொண்டு குறியீடாகக் கூறப்பெறும். ஆ - ஆன்மா; தி - திரை: உலக வாழ்வில் உயிர்களை அழுத்தி மறைத்தலைச் செய்வது எனப்பொருள்கூறுவர். திருவைந்தெழுத்தும் குறியீட்டெழுத்தே. சி - சிவம், வ - அருள், ய - ஆன்மா, ந - ம. மல எழுத்துக்கள். மலத்தினின்று ஆன்மாவை எடுத்து அருளானது சிவத்தில் சேர்த்தல் எனப் பொருள் இதற்கு வழங்கப்படும்.

ஆன்மாக்கள் மல இருளில் கிடந்து துஞ்சாமல் பரிபாகம் பெறும் பொருட்டுத் திருவருள் வெள்ளத்திலே அழுந்தி முழுகுமாறு எழுப்புவதே இத்திருவெம்பாவையின் உட்கிடையாம்.

"மலவிருளுற் றுறங்காமல் மன்னுபரி பாகவருட்
செலமுழுக வருகவெனச் செப்பல் திருவெம்பாவை"

என்பதனுல் இது வலியுறும். மலத்தைக் கழுவுவதே முழுகுதல் எனவும், திருவருட்பெரு வெள்ளமே தடாகம் எனவும் கொள்க. நாடோறும் நாம் நீரில் முழுகும்போது இறைவருடைய அருள்வெள்ளத்திலே முழுகித் திளைக்கிறேம் என நினைந்து சிவத்தியானத்தோடு முழுகுதல் வேண்டும் என்பது நியதி.

"தங்கண் மலங்கழுவுவார் வந்து சார்தலினுல்எங்கள்
பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்குமடு"

என்பது மணிவாசகத்தில் திருவெம்பாவைப்பகுதி.

இனி, இறைவர் செய்யும் நடனம் ஐந்தொழில் நடனமாம்: உடுக்கை வாத்தியம் பொருந்திய திருக்கரம் சிருட்டியைக் காட்டும். அமைந்த திருக்கரம்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காத்தலைக் குறிக்கும் அக்கினி பொருந்துங்கரம் அழித்தலை நினைவூட்டும். ஊன்றிய திருவடி உயிர்களை உலகபோகத்தில் அழுத்துவதை உணர்த்தும் எடுத்த பொற்பாதம் உயிர்களைப் பிறவிப் பெருங் கடலிலிருந்து முத்திக்கரையில் சேர்ப்பதையுணர்த்தும் என்பதாம். சிதம்பரம் =சித் - அம்பரம்=ஞானகாசம், சிவபெருமான் ஞானமே திருமேனியாகக் கொண்டவர். சிவஞானிகள் உள்ளத்தில் எழும் பேரொளிப்பிழம்பே சிவபிரான் வடிவம். சிதம்பரமே அவர் திருமேனியாம். ஸ்ரீ நடராசமூர்த்தி சிற்சபையை விட்டெழுந்தருளல் படைத்தலையும், இரட்சாபந்தனம் செய்தல் காத்தலையும், கிருஷ்ணகந்தம் சாத்துதலே அழித்தலையும், வெள்ளை சாத்துவது மறைத்தல் தொழிலையும், திருவிழாக்கொள்ளுதல் அநுக்கிரகம் செய்தலையும் குறிக்கும் என வேருெரு பிரகாரமாகவும் கூறுவர். நான் என்றும் அகங்காரம் ஆகிய அரக்கரைச் சங்கரித்து அவருடைய கரிய சாம்பரைத் திலதமாக இடுதலே கிருஷ்ணகந்தம் சாத்துதற்குரிய பாவனையாம். சங்காரகாலத்திலே இறைவருடைய திருமேனி வெப்பங்கொண்டு விளங்கியதால் அது சாந்தமாதற் பொருட்டுத் தேவர்கள் அவர் திருமேனியை வெண்மலர்களால் மறைத்தனர். வெள்ளை சாத்துதல் அந்தப் பாவனையைக் குறித்ததே. இறைவர் 'பொன்ஞர் மேனியர், என்னுங் குறிப்பை உணர்த்தவே திருவாதிரை நாளில் செவ்வந்திப்பூ அடையாளப் பூவாய் இறைவருக்கு அணியப்படுதல் காணலாம். பிரமதேவர் படைத்தற் கடவுள். அவர் நிறம் பொன்னிறம் படைத்தற் குறிப்பையுணர்த்தவே செவ்வந்தி மலர் சாத்தப்பெறுகிறது எனினுமாம் மஞ்சள் பொன் வண்ணம் எந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நற்செயலைச் செய்யத்தொடங்கினும் மக்கள் மஞ்ச ளைப் பயன்படுத்துகின்றனர். இக்குறிப்புக்கள் சிந் திக்கவேண்டுவன.

இனி முற்றத்திலே பூவைத்தலின் குறிப்பையும் இங்கேவைத்து ஆராய்வோம். விடியற்காலத்திலே பெண்கள் துயிலுணர்ந்து எழுகின்றனர். வீட்டுக் காரியங்களைச் செய்யத் தொடங்குமுன்வாயில் முற் றத்திலே குற்றம் போக்கித் தெற்றெனக் கோலமிட் டுப் பற்றுள்ளத்துடன் சாணத் (கோமயத்) திலே பொன்னிறமுள்ள பரங்கி அல்லது பூசுணை மலரைக் கொண்டுவந்து அழுத்திவைப்பர். இச்செயல் மார் கழி மாதம் முழுவதும் நம்நாட்டில் நடைபெறு கிறது. இச் செய்ல்கள் நமக்குச் சில சிந்தனையை எழுப்பி ஆராயச்செய்யுமன்றோ? அது இதுவாம் என்க.

கேவலத்திலே யாதொரு செயலுமின்றிக் கிடந்த ஆன்மாக்களுக்குக் கருவிகளைக் கூட்டிச் சகல நிலையில் வைத்துப் பின்பு சுத்தநிலையிற்கொண்டு சேர்த்தல் என்பதை இஃது உணர்த்தக்காணலாம். குமரி இருட் டுடன் கூடிய விடியற்காலத்திலேயே பெண்டிர் எழுந்து கைவிளக்கின் மூழுச்சோதிகாட்டி இச்செயல் செய்வர். ஆன்மா ஒளிமயன். அவ்வான்மா ஆணவ இருளில் அழுந்திக்கிடக்கிறது. அவ்வான்மாவுக்கு மாயாகருவிகளைக் கூட்டிக் கன்மத்தைத் தொலைப்பர் கடவுள். மலத்தாலே மலத்தைப் போக்குதல் வேண் டும். துணியிலுள்ள அழுக்கை வண்ணான் போக்க வேண்டுமானால் அவ்வழுக்குத்துணியில் உவர் மண், சாணி, சவர்க்காரம் முதலிய அழுக்குகளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யெல்லாம் கூட்டியே வெளுக்கக் காண்போம். ஆகலின், பெண்கள் நிலத்திலுள்ள அழுக்கு, குப்பைகூளங்களைக் கூட்டிப்போக்கி அந்நிலத்தில் பசுச்சாணம் கொண்டு மெழுகிப் பச்சரிசி மாவினால் தூயகோலம் போட்டு அழகுபடுத்துவர். அதன்மேல் சாணத்தைப் பிசைந்து உருண்டைசெய்து பொன்வண்ணப் பூக்களைச் செருகி அலங்கரிப்பர். மாயாகருவிகளைத் தனக்குக் கொடுத்தமையறியாமல் தனக்குக் கிடைத்த தனுகரண புவன போகங்களையே சதமெனக்கொண்டு ஆன்மா போகம் நுகர்தலை இச்செயல் நினைக்கச்செய்யும். இவ்வளவும் பெண்கள் செய்யும்தொழில். இறைவன் தமது சக்தியைக் கொண்டே ஐந்தொழில் நடத்துவர். கொண்டுசெலுத்துதல் (ஆளுதல்) ஆண்மை; அடங்கியொழுகுதல் (ஆளப்படுதல்) பெண்மைமாறுபட்ட இரண்டு சக்திகளாலேயே உலகம் இயங்கக் காண்கிறோம். மின்னியக்கமும் மாறுபட்ட இரண்டு சக்திகளால்தான் இயங்குகிறது. ஒன்று இயங்கும் சக்தி மற்றொன்று இயக்கும்சக்தி.

இனி, நாடோறும் பஞ்சகிருத்தியம் நடைபெறும் நிகழ்ச்சிகளை நாம் கோவில்களில் காணலாம். பூசை செய்யுங் காலங்களை நமது பெரியோர்கள் அவ்வாறு வகுத்துக் காட்டியுள்ளார். நாடோறும் வைகறையில் பள்ளியறையின் திருக்காப்பு நீக்கிப் பூசை நடைபெறும். அதுவே திருவனந்தல்; திருப்பள்ளியெழுச்சிக்காலம் அது. அந்தக்காலத்தில் செய்யப்படும் பூசை இறைவர் அநுக்கிரகத்தைத் தெரிவிப்பது. அப்பூசையின் பின்பு அபிஷேகம் முதலியவற்றுடன் பூசை நடைபெறும். அது சாங்கபூசை, சிருட்டியைக் குறிப்பது. அதன்பின் அத்தயாமத்துக்கு முன்வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் நடைபெறும் பூசைகள் எல்லாம் ஸ்திதியைக் குறிப்பனஆம், அத்தயாமபூசை சங்காரத்தைக் காட்டுவது. ஒடுக்ககாலம். அது, பள்ளியறைப் பூசை அத்தயாம பூசையின் பின் நடைபெறுவது; அது திரோதானத்தைக் குறிக்கும் என்பர்.

இனி, தேவதினத்தில் நடைபெறும் பஞ்சகிருத்திய பூசையைப்பற்றியும் சிந்திக்கக் கடவோம். தை மாதம் முதல் ஆனிவரை ஆறுமாதமும் தேவர்கட்குப் பகற்காலம். ஆடிமாதம் முதல் மார்கழிமுடிய ஆறுமாதமும் இராக்காலம். விடிய ஐந்துநாழிகையளவுள்ள மார்கழிமாதம் நடைபெறும் திருவிழா அநுக்கிரகத்தைக் குறிப்பது. தைமாத உற்சவம் சிருட்டி, மாசி மாதம் முதல் கார்த்திகை மாதம் வரை நடைபெறும் திருவிழாக்கள் சங்காரத்தை உணர்த்துவதாம். கார்த்திகைமாத விழா முற்றுப்பெறும் திருக்கார்த்திகை மறுநாள் தொடங்கி மார்கழி விழாவின் கொடியேற்று நாளுக்கு முதல்நாள் வரையிலுள்ள காலம் திரோதானம் என நாம் மனத்திற் கொள்ளுதல் வேண்டும். அநுக்கிரகம் முதலியவற்றுள்ளும் ஒவ்வொன்றிலும் பஞ்சகிருத்தியங்கள் உள்ளன. ஒவ்வொரு கிருத்தியத்திலும் துவசாரோகணம் முதல் தீர்த்தவாரிமுடியப் பஞ்சகிருத்தியப்பாகுபாடுகள் உள அவை வருமாறு:- சிருட்டி கொடியேற்றுதல், ஸ்திதி பலியிடுதல், சங்காரம் கிருஷ்ணகந்தம் சாத்துதல், ரதாரோகணம் திரோபவாம், தீர்த்தவாரி அநுக்கிரக சொரூபமாம்.

1. துவசாரோகணமாவது:- ஆணவ இருளில் அழுந்திக்கிடக்கும் ஆன்மாக்கள் உய்யும் பொருட்டு



பொதுசன நூலகம் 118301
யாழ்ப்பாணம்.
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்விருளினின்றும் எடுத்தலைக்காட்டுவது: அது சிருட்டி எனப்படும்.

2. பலியிடுவதாவது - மலபரிபாகத்தின் பொருட்டு ஆன்மாக்களுக்குக் கொடுத்தருளும் தனுகரண முதலியவற்றைக் காட்டுதலால் அது ஸ்தியாம்.

3. கிருஷ்ண கந்தம் சாத்துதலாவது - ஆன்மாக்களைப் பந்தப்படுத்தியிலிருந்த பாசத்தைஞானப் பார்வையால் ஒடுக்குவது என்பர். ஆதலின் அது சங்காரமாம்.

4. ஏதாரோகணமாவது - துன்பமயமான உலக வியவகாரங்கள் முழுவதும் கீழ்ப்பட அதன் மேற்கொள்ளுதல் திரோபவத்தை உணர்த்தும்.

மார்கழிமாதம் தேவதினத்தின் அநுக்கிரகம் ஆதலால் அம்மாதத்தில் நடைபெறும் உற்சவமே மிகச்சிறப்புடையது கிழமைகளில் சோமவாரம் சிறப்புடையதுபோலவே நாள்களில் திருவாதிரையும் விசிட்டமானதென்பர். திருவாதிரையைத் தீர்த்தவாரி தினமாகக்கொண்டு அதற்கிசையத் துவஜாரோகணம் முதலியவை தொடங்கி விழா நடைபெறக்காணலாம். இவ்விழாவுக்குரிய மூர்த்தி ஸ்ரீ நடராசப்பெருமான். அவர் வடிவம் ஸ்ரீ பஞ்சாக்கரம். வாச்சிய மந்திரமாகிய சிவசக்தி அவருக்கு உண்மைவடிவம் வாசமந்திரம் அப்பெருமானுக்குக் கற்பிதவடிவமாம். அவருடைய ஆனந்தநடனம் பஞ்சக்கிருத்திய நடனமாம். சிருட்டி - டமருகரம், ஸ்திதி - அபயகரம், சங்காரம் - அக்கினி பொருந்திய கரம், திரோபவம்- ஊன்றிய பதம், அநுக்கிரகம் - குஞ்சிதபாதமாம். இதனை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தோற்றம் துடியதனில் தோயும் திதியமைப்பில்
சாற்றியிடும் அங்கியிலே சங்காரம் - ஊற்றமா
ஊன்று மலர்ப்பதத்தில் உற்ற திரோதமுத்தி
நான்ற மலர்ப்பதத்தே நாடு" எனவும்,

"மாயை தனையுதறி வல்வினையைச் சுட்டு மலம்
சாய அமுக்கியருள் தானெடுத்து - நேயத்தால்
ஆனந்த வாரிதியில் ஆன்மாவைத் தானழுத்தல்
தானெந்தை யார் பரதம் தான்"

எனவும் வரும் உண்மை விளக்கச் செய்யுள்களான் அறிக இனி,

"அரன் துடி தோற்றம் அமைத்தல் திதியாம்
அரனங்கி தன்னில் அறையில் சங்காரம்
அரனுற்றணைப்பில் அமருந் திரோதாயி
அரனடி என்றும் அநுக்ரகமென்னே"

என்னும் திருமந்திரமும் இதனை வலியுறுத்தும்.

இறைவர் ஒப்புயர்வற்றவர். விருப்பு வெறுப்பு இல்லாத விமலர் அவர். எட்டுவான் குணத்து ஈசர். அப்பெருமானுடைய கிருத்தியங்கள் எல்லாம் ஆன்மாக்களாகிய நம்பொருட்டேயாம், அவை அவர்தம் பொருட்டன்று. சிருட்டியே இறைவருடைய கன் மானுட்டானம். ஸ்திதியே அவருக்கு ஆகாரம். சங்காரமே சுவஸ்திகம். திரோபவமே நித்திரையாம். அநுக்கிரகமே துயில்நீத்தலாம். இத்தன்மைகள் உள்ள இறைவர் ஆன்மாக்கள் செய்யும் அபிஷேகத் தையே சிருட்டியாகக் கொள்வர். நைவேத்தியத்தை யே ஸ்திதியாகவும், கிருஷ்ணகந்தத்தையே சங்கார மாகவும், கபிலைதரிசனத்தையே திரோபவமாகவும் தீபாராதனை முதலியவைகளையே அநுக்கிரமாகவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்றுக்கொண்டு மகிழ்வர். துயிலெழுங்காலமே தின ஆரம்பம் ஆகலின், இலக்குமி வசிக்கும் கபிலையின் பிற்பாகத்தைத் தரிசிப்பவர் எவ்வித குறைபாட்டி னின்றும் நீங்குவர். செல்வமுடையருமாவர். திரோ பலத்தின் நீங்கிய அவசரம் துயில் நீத்தல் ஆகலின் அவ்வுபசாரம் செய்விப்பர். உலகியலை நடத்திக் காட்டுவதாய் இலக்குமிதேவிக்கு அநுக்கிரகம் பண்ணு வது மாத்திரையாய் உள்ளது. இதனை இரண்டாவது பக்கம் இறுதி நோக்கியறிக.

இனி, பிறக்க முத்தி தருவது திருவாரூர். இஃது இயல்பாகக் கிடைக்கவேண்டியது, மிகப் பெரும் புண்ணியத்தால் ஆம்: எளிதன்று. இறக்க முத்திதரும் தலம் ஸ்ரீகாசி. அதுவும் பெரும் புண் ணியத்தால் உண்டாம் பெருமுயற்சியால் கிடைப் பது: அதுவும் அரியதொன்றே. சிந்திக்க முத்தி யளிப்பது திருவண்ணுமலை சிந்தித்திருப்பதற்கு மனம் ஒருவழிப்பட்டிருத்தல் வேண்டும். இல்லா விடின் அதுவும் கூடாது தெரிசிக்க முத்தியருளுவ தில்லை: அது யாவருக்கும் எளிதிற்கூடும். கண்ணுற் கண்ட மாத்திரையில் முத்தி சித்திப்பது எளிதல்ல வா? ஆகலின் தில்லைச்சிற்றம்பலத்தைச் சென்ருெரு கால் கும்பிட்டாலும் எல்லையிலா ஆனந்தம் எல் லோருக்கும் கிட்டுமே. தில்லைச்சிற்றம்பலம் அருள் வடிவம் திரு+சிறு+அம்பலம்= திருச்சிற்றம்பலம். சித்+அம்பரம்= சிதம்பரம். ஞாஞகாசம் தகரகாசம் சிற்றம்பலம் ஆறு அங்கணங்களாக உள. அதில் 3-வது அங்கணமாகிய புதன் வீட்டிலே ஸ்ரீ நடராசப் பெருமான் எழுந்தருளியுள்ளார். ஸ்ரீ நடராசப் பெரு மான் வடிவம் ஞானமயம். சிவஞானிகளால் சிந் தித்துக் காணப்பெறுவது அவர். "உணர்ந்தார்க்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வரியோன்.'' சிதம்பரத்திலே எழுந்தருளி யுள்ள ஆனந்த நடராசருடைய குஞ்சித சேவடியைக் கும்பிட்டிருத்தலே பெருந்தவம், சிவதவம் ஆம். இதனை,

''குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும், பனித்த சடையும் பவளம்போல் மேனியிற்பால் வெண்ணீறும், இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்ருல், மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே''
எனத் திருநாவுக்கரசுசுவாமிகள் அருளுகின்ருர்கள்,

ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் தில்லைக்குச் சென்று ஸ்ரீ நடராசப் பெருமானைத் தரிசித்தருளு கின்றமையை ஸ்ரீ சேக்கிழார்சுவாமிகள் நமக்குப் படம் பிடித்தருளுகின்ருர்கள்.

இதனை, ''ஐந்துபேரறிவும் கண்களே கொள்ள அளப் பரும் கரணங்கள் நான்கும், சிந்தையே யாகக் குணமொரு மூன்றும் திருந்து சாத்துவிகமேயாக, இந்து வாழ்சடையான் ஆடும் ஆனந்த எல்லையில் தனிப்பெருங்கூத்தின், வந்த பேரின்ப வெள்ளத் துள் திளைத்து மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்'' எனவும்,

''தெண்ணில்லா மலர்ந்த வேணியாய் உன்றன் திருநடம் கும்பிடப் பெற்று, மண்ணிலே வந்த பிறவியே எனக்கு வாலிதாம் இன்பமாம் என்று, கண்ணிலானந்த அருவிநீர் சொரியக் கைமலர் உச்சிமேற் குவித்துப், பண்ணினுல் நீடி அறிவருப் பதிகம் பாடினுர் பரவினுர் பணிந்தார்'' எனவும் பெரிய புராணத்தில் அருளியிருக்கின்றமையால் அறியலாம்.

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தோக்கியம், தைத்ரீயம், கைவல்லியம் முதலிய உபநிடதங்களில் விரிவாகவும், தரிசனோபநிடதத்தில் குறிப்பாகவும், ஸ்காந்தம் முதலிய மகா புராணங்களில் இத்தலம் மிக விரிவாகவும் பேசப்பட்டுள்ளதென்பர்.

இனி, இருதயத்தானத்தைவிட பிரமரந்திரம் உயரமாயிருக்கிறது. இருதய புண்டரீகமே தகராகாசம். சிற்சபையை விட ஆயிரங்கால் மண்டபம் உயர்ந்திருக்கக் காணலாம். பிரமரந்திரம் ஆயிரம் இதழுள்ள கமலம். அது புத்திதத்துவம் என்று பேசப்படும். புத்திதத்துவம் பாலாடை மேலே பரவுவது போலப் பரவியுள்ளது. மறந்துபோன ஒரு விஷயத்தை நாம் அறியவேண்டுமானுல் அண்ணுந்து மேலே நோக்குகிறோம். அது நினைவுக்குவரக் காண்கிறோம். நம் அநுபவம் அது. புத்திதத்துவத்தை நோக்கியே நாம் அதனை அறிதல்வேண்டும். ''ஆசாரத்தால் நூலை அடையலாம்; ஆனுல், நூலால் ஆசாரத்தை அடைய முடியாது'' என்பது சாந்தோக்கியம். சதாசாரத்தால் நூல் இனிது எளிதில் விளங்கும் என்க. திருச்சிற்றம்பலமே சிற்சபை, பொன்னம்பலம் கனகசபை, உற்சவமூர்த்திகள் எழுந்தருளியிருக்கும் பேரம்பலம் தேவசபை, ஊர்த்துவ தாண்டவமூர்த்தி எழுந்தருளுமிடம் நர்த்தனசபை, ஆயிரங்கால் மண்டபம் இராசசபை எனப் பெயர்பெறும். திருச்சிற்றம்பலத்தினின்று இராசசபைக்குச்சென்று அபிஷேகம் கொண்டருளிப் பின் சிற்சபைக்கு எழுந்தருளும். நடராசர் காட்சியே தரிசனம் என்று சொல்லப்படும். ஸ்ரீ நடராசமூர்த்திக்குப் பிரபாங்கம் பிரியாமல் இருக்க வேண்டும் என்பது விதி. ஓங்காரமே திருவாசியாம் என்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ நடராசமூர்த்தியின் ஆறு அபிஷேகநாட்க ளாவன - சித்திரையில் திருவோணம், ஆனியில் உத்தரம், மார்கழியில் திருவாதிரை நட்சத்திரங்களும்; ஆவணி, புரட்டாசி, மாசி மாதங்களில் பூர்வபக்க சதுர்த்தசிகளும் ஆம்.

மார்கழி - உஷத்காலம், மாசி - காலைச்சாந்தி, சித்திரை-உச்சிக்காலம், ஆனி-பிரதோஷகால்ம், ஆவணி-மாலைச்சாந்தி, புரட்டாசி - அர்த்தயாமம் எனக்கொள்ளப்படும்.

இனி மெய்யன்புடைய சேந்தனார் நாடோறும் இறைவருடைய பரிகலசேஷமே அமுதாகக் கொள்ளும் நியமம் உடையவர். முன்பு ஒரு மார்கழித் திருவாதிரை நாளில் தமக்குப் பிட்டும் களியுமே அமுதாக அமைந்தது அதனை மிக வருத்தத்துடன் இறைவருக்கு நிவேதித்தார். இறைவர் அவருடைய மெய்யன்பை விளக்கவும் அவருக்குள்ள வருத்தத்தைப் போக்கவும் திருவுளங்கொண்டார். பிட்டும் களியுமே சிற்சபையிலே தமது திருவடியின்கீழ் யாவரும் காணச் செய்து அவருக்கு அநுக்கிரகம் செய்தார். அன்று தொடங்கியே மார்கழித் திருவாதிரை தோறும் பிட்டும் களியுமே விசேட நிவேதனமாக அமைந்தது. மார்கழித் திருவாதிரைவிழா முழுவதும் அநுக்கிரகம் குறித்ததே.

இதனால் மாதங்களில் எல்லாம் மார்கழியே சிறந்தது எனவும், அதனுள் திருவாதிரை விழாச் சிறந்தது எனவும், அவ்விழாக் காலத்திலே திருவெம்பாவை பாரயணமே சிறந்தது எனவும் ஆன்றோர் ஆசாரமாகக் கொண்டனர். இத்திருவெம்பாவை திருவண்ணா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலையிலே ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகளால் அருளிச் செய்யப்பட்டது. பிற செய்திகள் விரிவஞ்சி விடுக் கப்பட்டன.

"மாணிக்கக் கூத்தனை வண்தில்லைக் கூத்தனைப்
பூணுற்ற மன்றுட் புரிசடைக் கூத்தனைச்
சேணுற்ற சோதிச் சிவானந்தக் கூத்தனை
ஆணிப்பொற் கூத்தனை யாரறிவாரே"

திருமந்திரம்

திருச்சிற்றம்பலம்.

தமிழ் மொழி தெய்வத்தன்மையுடைய மொழி என்பதை அதனைக் கற்றுணர்ந்தோர் அறிவர். "வினையின் நீங்கி விளங்கிய அறிவின், முனைவன் கண்டது முதல் நூலாகும்" என்ற பொன்மொழி யால் அதனை அறியலாம் தமிழ் நூல்களின் கிடக்கையாக அறியப்படும் பயன்களும், "அறம், பொருள், இன்பம், வீடு அடைதல் நூற்பயன்" என்ற முறையிலேயே குறிக்கப்பெற்றுள்ளன. வள்ளுவரும் அவ்வுண்மையை வெளிப்படுப்பான் போலக் "கற்றதனாலாய பயன் என்கொல்" எனச் சுட்டிக் காட்டினார். நாவலர் சோமசுந்தர பாரதியார், "தமிழினிய தெய்வதமே" என்று கூறியுள்ளார். இவ்வரிய உண்மையை உலக றியஎடுத்துக் காட்டவல்ல நூல் திருவாசகம் ஒன்றேயாம்.

ப. துரைக்கண்ணு முதலியார், M.A.,
M.A.L.T., DIP.EC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோவையார்த் தலங்கள்

சங்கநூற் செல்வர் — பண்டிதமணி,
சு. அருளம்பலவனூர், காரைநகர்

திருக்கோவையாரில் மாணிக்கவாசகப்பெருமானால் பெயர் குறிப்பிடப்பட்ட தலங்கள்:

| | |
|---|---|
| இடைமருது | சுழியல் |
| ஈங்கோய் | பரங்குன்று |
| ஏகம்பம் | பனையூர் |
| கடம்பை | பூவணம் |
| கயிலை | மூவல் |
| கழுக்குன்று | வாஞ்சியம் |
| காழி | வெண்காடு |

என்பன. இத்தலங்களுள் இடைமருது, ஏகம்பம், கயிலை, கழுக்குன்று, பூவணம், வாஞ்சியம் என்பன திருவாசகத்திலும் கூறப்பட்டுள்ளன.

திருக்கோவையார்த் தலங்களுள் தேவாரம் பெற்ற தலங்கள் ஏகம்பம், கடம்பை, கயிலை, பனையூர் பூவணம், வாஞ்சியம், வெண்காடுஎன்பனவாம்.

இடைமருது என்பது திருவிடை மருதூர் என்னும் தலம். இது இடைவை என்றும் வழங்கப்படுகிறது. காவிரியின் தென்கரைக்கணுள்ளது. உருத்திரர், உமையம்மை, விநாயர், முருகன், திருமால், பிரமன் முதலியோர் பூசித்த தலம். "வருந்திய மாதவத்தோர் வானோரேனோர் வந்தீண்டிப் பொருந்திய... இடைமருதில், பொருந்திய கோயில் கோயிலாகப் புக்கிருந்தீரே" எனத் திருஞானசம்பந்தசுவாமிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருளியுள்ளார். திருவிடைமருதூரிலுள்ள காவிரித் துறையில் தைப்பூசத்தில் நீராடுவது மிக விசேடமானது.

"பாசமொன் றில்லாய்ப் பலபத்தர்கள்
வாச நாண் மலர் கொண்டடிவைகலும்
ஈசனெம் பெருமான் இடைமருதினில்
பூசநாட் புகுதும் புனலாடவே" (தே.128-1)

எனத் திருநாவுக்கரசுசுவாமிகள் தைப்பூசத்தில் நீராடுதலைப்பற்றி அருளியுள்ளார்.

"இடைமரு ததனில் ஈண்ட இருந்து" (கீர்த்தி. 75)
"இடைமரு துறையும் எந்தாய் போற்றி"
(போற்றி. 145)
"உத்தரகோச மங்கைக் கோன் றங்கு
இடைமருது பாடி" (பொன்னூசல் 2)
"அந்த இடைமருதில் ஆனந்தத் தேனிருந்த
பொந்தை" (பூவல்லி 2)
"பருகியநின் பரங்கருணைத்தடங்கடலிற்படிவாமா
றருளெனக்கிங் கிடைமருதே இடங்கொண்ட
அம்மானே" (ஏசறு 9)
"கோல மணியணி மாடநீடு குலாவும் இடவை
மட நல்லாட்குச் சீல மிகக் கருணை யளிக்குந் திற
மறிவா ரெம்பிரானாவாரே" (திருவார்த்தை. 2)

என இறைவன் திருவிடைமருதூரில் எழுந்தருளியிருத்தலும் அடியார்க்கு அருளும் திறமும் திருவாசகத்துக் கூறப்பட்டுள்ளன.

ஈங்கோய் என்பது ஈங்கோய்மலை என்னும் தலம். காவிரிக்கரையில் இம்மலை இருக்கின்றது. அகத்திய முனிவர் ஈ உருவமாகச்சென்று சுவாமியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபட்ட தலம். கோயில் குன்றின்மேல் இருக்கிறது.

"ஏலத்தொடுநல் லிலவங் கமழ் ஈங்கோய்மலை"
(தே. ஞா. 70-2)
"சிறைவண்டறை பூஞ்சாரல் ஈங்கோய்மலை"
(ஷ 4)
"எழிலார் சுனையும் பொழிலும் புடைசூழ்
ஈங்கோய்மலை" (ஷ 11)

எனத் திருஞானசம்பந்தசுவாமிகளும்,

"ஏலமணநாறும் ஈங்கோய் நீங்கார்"
(தே. நாவு. 231-3)
"ஈங்கோய் நீங்கா இறைவனை" (ஷ 268-7)
"ஈங்கோய் நீங்காதுறையு மிறைவன் றன்னை"
(ஷ 274-10)

எனத் திருநாவுக்கரசுசுவாமிகளும் ஈங்கோய்மலையின் சிறப்பையும் அடியார்க்கருள்செய்யும் பொருட்டு இறைவன் அங்கு எழுந்தருளியிருத்தலையும் கூறியுள்ளார்கள்.

மாணிக்கவாசகப்பெருமான், "ஈங்கோய்மலையில் எழிலது காட்டியும்" (கீர்த்தி. 74) எனவும், "ஈங்கோய் மலையெம் எந்தாய் போற்றி" (போற்றி. 158) எனவும் திருவாசகத்தும் "ஈங்கோயிற் சிறந்து சிற்றம்பலத்தாடுமெங் கூத்தப்பிரான்" எனத் திருக்கோவையாரிலும் கூறியுள்ளார்.

ஏகம்பம்-கச்சி ஏகம்பம். ஏகாம்ரம் என்பது ஏகம்பம் என மருவியது. ஏக ஆம்ரம்-ஒரு மா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கச்சி ஏகம்பம் எனப்படும். காஞ்சீபுரத்திலுள்ள ஏகாம்பரநாதர் கோயிலின் தலவிருட்சம் மாமரமாதலின் ஏகம்பம் எனப்பட்டது. "நிறைமலர்த் தனிமா நீழன் நித்தனே" எனக் காஞ்சிப்புராணத்து (தழுவக்குழைந்த. 405) வருதலுங் காண்க. கச்சியப்பர் "காஞ்சிமாவடி வைகுஞ்செவ்வேள் மலரடி போற்றி" என்று கந்தபுராணத்துக் கூறியிருத்தலுங் காண்க.

"ஏரினுர் பொழில் சூழ்ந்த கச்சியேகம்பம்"
(தே. ஞான. 133-11)
"கச்சியுள் புடையே பொன்மலருங் கம்பைக்கரை
யேகம்பம்" (ஷை 148-5)
"கச்சியுள் ஆதியார் மேவியாடுந் திருவேகம்பம்"
(ஷை 148-10)
"ஏகம்பத்துறை யீசன் சேவடி யேத்த இடர்கெடு
மே" (ஷை 133-6)

எனத் திருஞானசம்பந்தசுவாமிகளும்,

"எழிலார் கச்சி ஏகம்பம்" (தே. நாவு. 161-2)
"அமரர்கள்தாம் அருச்சித்தேத்த இருந்தவன்
காண் ஏகம்பன்" (ஷை 278-5)
"அருந்தவத்தான் ஆயிழையாள் உமையாள்பாகம்
அமர்ந்தவன் காண்" (ஷை 278-5)
"ஏகம்பம் மேவினுரைக் கையினுல் தொழவல்
லார்க்குக் கடுவினை களையலாமே" (ஷை 44-5)

எனத் திருநாவுக்கரசுசுவாமிகளும்,

"மாடங் காட்டும் கச்சி" (தே. சுந். 6-9)
"ஏலவார்குழலாள் உமைநங்கை என்றும் ஏத்தி
வழிபடப்பெற்ற...கம்பன் எம்மானை" (ஷை 61-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனச் சுந்தரமூர்த்திசுவாமிகளும் கச்சிஏகம்பத்தினை யும் அதனை வழிபடலால் உண்டாகும் பெரும்பயனை யும்கூறியுள்ளார்கள்.

மாணிக்கவாசகப்பெருமான்,

"ஏகம்பத்தின் இயல்பாயிருந்து
பாகம்பெண் ணோடாயின பரிசும்" (கீர்த்தி. 77-8)

"ஏகம்பத்துறை எந்தாய் போற்றி
பாகம்பெண்ணுரு வானாய் போற்றி"
(போற்றி. 151-2)

"தேசமெல்லாம் புகழ்ந் தாடும்கச்சித்
திருவேகம்பன் செம்பொற் கோயில் பாடி"
(திருப்பொற். 4)

"செறிவுடை மும்மதி லெய்த வில்லி
திருவேகம்பன் செம்பொற் கோயில்பாடி"
(திருப்பொற். 5)

"படமாகஎன்னுள்ளே தன்னிணைப்போ தவையளித் [திங்
கிடமாகக் கொண்டிருந்த ஏகம்பமேயபிரான்"
(பூவல்லி. 14)

என ஏகம்பன் திருக்கோயிற்சிறப்பினையும் பாகம் பெண்ணோடாயின தன்மையையும் அடியாராயினார்க்கு அருள்செய்தலையும் திருவாசகத்துக் கூறியுள்ளார்.

கடம்பை - திருக்கடம்பூர் என்னும் தலம். இத் தலத்தின்கணுள்ள திருக்கோயிலுக்குக் 'கரக்கோயில்' என்று பெயர். இந்திரன் வழிபட்டு அமிர்தம் உண் டாகும்படி வரப்பெற்ற தலம்.

"தண்புனல் நீள்வயல் தோறும் தாமரைமேல் [அன்னம் வைகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்புணர் காவில் வண்டேறக் கள்ளவிழுங்
[கடம்பூர்'' (தே. ஞான. 204-6)
''காவிரி கொன்றைகலந்த கண்ணுதலான்
[கடம்பூர்'' (ஷ 204-7)
''வானமர் திங்களு நீரு மருவிய வார்சடையானைத்
தேனமர் கொன்றையினானைத் தேவர்தொழப்படு
[வானைக்
கானமரும் பிணைபுல்கிக் கலைபயிலுங் கடம்பூரில்
தானமர் கொள்கையி னானைத்தாடொழ வீடெளி
[தாமே'' (ஷ 204-1)
எனத் திருஞானசம்பந்தசுவாமிகளும்,

''கொல்லை முல்லை கொழுந்தகை மல்லிகை நல்ல
[சேர் கடம்பூர்'' (தே. நாவு. 13?-6)
''கிளரும் பேரொலி கின்னரம் பாட்டருக் களரியார்
[கடம்பூர்'' (ஷ 133-7)
''புணர்முலையாளொடும் மன்னினான் கடம்பூர்க்
[கரக்கோயிலே'' (ஷ 133-2)
''தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்கடன் அடியேனையுந் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே''
(ஷ 132-9)
''கரக்கோயிலை நினையும் உள்ளத்தவர் வினை
நீங்குமே'' (ஷ 132-5)

எனத் திருநாவுக்கரசுசுவாமிகளும் கடம்பையின் சிறப்பினையும் ஆண்டு இறைவன் எழுந்தருளியிருத்தலையும், கரக்கோயிலை வழிபடுதலினாலுண்டாகும் பயனையும் கூறியுள்ளார்கள்.

மாணிக்கவாசகப்பெருமான் ''கடம்பூர் தன்னில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடப்பெற இருந்தும்'' (கீர்த்தி. 83) எனவும், "கடம்பூர் மேவிய விடங்கா போற்றி" (போற்றி 190) எனவும் திருவாசகத்தும் ''தில்லையில் மெல்லியல் பங்கன் எங்கோன் தண்கடம்பை'' எனத் திருக்கோவையாரிலும் (220) கூறியுள்ளார்.

கயிலை - கயிலாயமலை. வடநாட்டுத் தலங்களுள் ஒன்று. ''வடகயிலை மலை'' எனத் தேவாரத்து (நாவு. 295 - 3) வருதலுங் காண்க. சுந்தரமூர்த்தி சுவாமிகளால் 'நொடித்தான்மலை' எனப்பாடப்பட்டதும் இதுவேயாம். 'தொண்டனேன் பரமல்லதொரு, வேழமருள் புரிந்தான் நொடித்தான்மலையுத்தமனே' 'உயர்பொன் நொடித்தான்மலை' (தே.சுந்.100-4,10)என வருவனகாண்க.'மானக்கயிலைமலையாய் போற்றி' (போற்றி 167) 'கயிலைப் பரம்பரனே' 'கயிலாயமென்னும் மலைத்தலைவா' (நீத் 38, 40) 'கயிலைமாமலை மேவிய கடலே' (செத்திலாப். 10) எனக்கயிலைமலையின் பெருமையையும் இஃது இறைவனுக்குரியதாதலையும் திருவாசகம் கூறும். திருக்கோவையாரிலே பல இடங்களில் இம்மலை கூறப்பட்டுள்ளது.

காழி - சீகாழி என்னும் திருப்பதி. திருஞானசம்பந்த சுவாமிகள் குழந்தைப்பருவத்தில் குளக்கரையில் இருந்து அழுதபோது இறைவன் உமையம்மையாரொடு இடபாருடராய்த்தோன்றி ஞானப்பால் கொடுத்தருளியதலம். 'கள்ளம்புகு நெஞ்சர் காணு விறையுறை காழி" என்று மாணிக்கவாசகப்பெருமானால் திருக்கோவையாரில் (379) இத்தலம் கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சிவநகர்** - ஒரு திருப்பதி. 'தில்லை நம்பன் சிவ நகர் (209) என்று இப்பதி திருக்கோவையாரில் கூறப் பட்டுள்ளது.

**சுழியல்** - திருச்சுழியல் என்னும் தலம். பார் வதிதேவியார், சதானந்தமுனிவர் முதலியோர் பூசித்த தலம். 'அடியார் என்பிடை வந்தமிழ்தூற நின் றுடி யிருஞ்சுழியல்' என இத்தலத்தைத் திருக்கோ வையார் (373) கூறுகின்றது.

**பரங்குன்று** – திருப்பரங்குன்று என்னும் தலம். மதுரையிலிருந்து நான்குமைல் தூரத்திலுள்ளது. 'பற்றொன்றிலாதார் பற்றுந் தில்லைப்பரன் பரங்குன் றின்' (178) 'தொழும்பிற் பரிந்தெனையாண்ட சிற்றம் பலத்தான் பரங்குன்றில்' (279) 'அம்பலத்துப் பதியுடையான் பரங்குன்று' (292) என இறைவ னுடைய தலமாகத் திருக்கோவையார் கூறுகின் றது.

**பனையூர்**:- திருப்பனையூர் என்னும் தலம் பரா சரமுனிவர் பூசித்த தலம். கோயிலுக்கு உட்புறத்தில் பனைமரங்கள் இரண்டு நிற்கின்றன. சுந்தரமூர்த்தி நாயனருக்குத் திருக்கூத்தொடு இறைவன் காட்சி கொடுத்தருள அவர், 'மாடமாளிகை கோபுரத்தொடு மண்டபம் வளரும் வளர்பொழில், பாடல்வண்டறை யும் பழனத் திருப்பனையூர்' (87) என்னும் திருப்பதி கம் பாடி வணங்கிய தலம். இதனைத் 'திருப்பனை யூரில் விருப்பனுகியும்' என்று திருவாசகமும் (கீர்த்தி 87) 'உம்பர் சென்றேத்திநிற்குந் திருப்பனையூர்' எனத் திருக்கோவையாரும் (137) கூறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூவணம்:- திருப்பூவணம் என்னும் தலம். பிரமன் பூசித்த தலம். பொன்னனையாள் என்னும் அடியாள், இறைவன் சித்தராய் எழுந்தருளிவந்து இரசவாதஞ் செய்துகொடுத்த பொன்னினால் திருவுருவஞ் செய்து வழிபட்ட தலம்.

'பூவண மதனிற் பொலிந்திருந் தருளித்
தூவண மேனி காட்டிய தொன்மையும்'
(கீர்த்தி 50-1)

எனத் திருவாசகத்து வருதல் காண்க.

'தில்லைச் சிற்றம்பலத்துப், பொற்பந்தியன்ன சடையவன் பூவணம்' (305)
'எரியாடு மிறைதிகழும், பொன்மாப்புரிசைப் பொழிற் றிருப்பூவணம்' (338)

என இதனைத் திருக்கோவையார் கூறுகின்றது.

மூவல் என்பது ஒரு திருப்பதி. 'மூவல் தழீஇய வருண்மூதலோன்' (191) 'தேவர்க்கெல்லாம் முன்னவன் மூவல்' (306) என்று இப்பதியைத் திருக்கோவையார் கூறும்.

வாஞ்சியம்:- திருவாஞ்சியம் என்னும் தலம். திருமால் இலக்குமியை விரும்பி இறைவனைப் பூசித்த காரணத்தால் இத்தலம் இப்பெயர் பெற்றது என்பர்.

'திருவாஞ்சி யத்திற் சீர்பெற இருந்து
மருவார் குழலியொடு மகிழ்ந்த வண்ணமும்'
(கீர்த்தி 79-80)

என்று இப்பதியில் இறைவன் இறைவியொடு எழுந்தருளியிருத்தல் திருவாசகத்துக் கூறப்பட்டுள்ளது.

5

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'அம்பலஞ்சேர்மன்தங்கு இடைமருது ஏகம்பம் வாஞ்சியம்' (268) எனத் திருக்கோவையார் கூறும்.

வெண்காடு:- திருவெண்காடு என்னும் தலம். இங்கு இறைவன் ஒரு விருந்தினராக எழுந்தருளிக் குருந்த மரத்தடியில் வீற்றிருந்தமையை,

'விருந்தின ஞகி வெண்கா டதனில்
குருந்தின் கீழன் றிருந்த கொள்கையும்(கீர்த்தி.60-1)

என்று திருவாசகம் கூறுகின்றது. 'தில்லை நின்ற மேலன் புகுந்தென் கணின்ருனிருந்த வெண்காடு' (286) என்று இத்தலம் திருக்கோவையாரில் கூறப்பட்டுள்ளது.

'செம்பொன்வரை' (308) 'பொதியம்' (139, 140, 336, 392, 394)'குற்ருலம்'(135) 'தில்லை' என்பனவும் திருக்கோவையாரில் கூறப்பட்டுள்ளன.

---

Thiruvasakam depicts in beautiful hymns the progress of the soul, from the bondage of ignorance and passion into the liberty of light and love, its first awakening, its joy and exaltation, waywardness and despondency, struggle and unrest, the peace and the joy of union.

—Dr. G. U. POPE

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்களிரண்டும் அவன் கழல் கண்டு களிப்பன ஆகாதா? ஆகுமா?

திரு. மு. கந்தையா, B.A. (Hons), ஏழாலை.

ஒன்றாய் நிற்றல், வேறாய் நிற்றல், உடனாய் நிற்றல் என்ற மூன்று நிலைகளும் இறைவன் உயிர்க்கு உபகரித்து நிற்கும் நிலைகளாகும். இவ்வுபகாரம் உயிரின் பெத்த நிலையினும் முத்தி நிலையினும் ஒருதன்மைத்தாகவே யுள்ளது. ஆனால், இவ்வுபகாரத்தைப் பெறுவோனாகிய உயிரின் தன்மை மட்டும் இரு நிலையினும் ஒரே தன்மைத்தாயிருப்பதில்லை. பெத்தநிலையில், உயிருக்கு இறைவன் தன்னோடு ஒன்றாய் நிற்றல், வேறாய்நிற்றல், உடனாய் நிற்றல்களின் இரகசியமே புரிவதில்லை. அது, பெரும்பாலும், எவ்வாற்றானுந் தானாய் நிற்பதாகவே கருதிக் கொள்ளுகின்றது. அதுதான் என்செய்யும்! பாவம்! அதைப் பந்தித்த மலத்தின் மறைப்பு அத்தகையது.

என்றென்றும் ஒன்றாயும் வேறாயும் உடனாயும் நின்றருளும் இறைவனே உயிரின் பரிபக்குவத்தை யறிந்து ஒருகால் குருவடிவில் தோன்றி அதன் மலக்கோணை அகற்றியருள்வன். அங்ஙனம் அவனருளால் மலக்கோண் நீங்கிய உயிர் சீவன் முத்தனெனப் பெயர் பெறுகின்றது. தன் தகைமைக்கேற்ப, மேற்கொண்டு தானடையவேண்டிய அதிகாரமுத்தியோ, அபரமுத்தியோ, பரமுத்தியோ தனக்கு வாய்க்கும்வரையில் அவ்வுயிர், குருவருள் நிகழ்ந்தகாலை எவ்வுடலிலிருந்ததோ அவ்வுடலிலேயே இருந்து, அவ்வருள் நிகழ்ந்தகாலை எவ்வுலகில் வாழ்ந்ததோ அவ்வுலகிலேயே வாழ்ந்துவர வேண்டியதாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த எல்லைவரையும் அது சீவன் முத்தனுகவே யிருக்கும். சீவன் முத்த நிலையிலிருப்பனவாகிய இந்த உயிர்களையே நாங்கள் பொதுவில் ஞானிகள் என்கின்றேம். ஒரோவோர் சிறப்பியல்புபற்றி ஒரோவோரிடங்களில் அடிகள், நாயனர், ஆசாரியர் என்றும் கூறுகின்றேம்.

இப்பெரியார்கள் அனைவரும் தம் பெத்தநிலை நீங்கி இனி முத்தி நிலைக்கு அருகராந் தகுதி பெற்றவர்கள். இறைவன் தம்முடன் ஒன்ருய் நிற்றல் வேருய்நிற்றல் உடனுய் நிற்றல்களைப்பற்றி ஒன்றுமே தெரியாதிருந்த நிர்மூடநிலை இப்பொழுது அவர்களுக்கில்லை. தம்மோடு ஒன்ருய் நிற்கும் இறைவனைத் தாம் ஒன்றிநின்று பக்தி பண்ணவும், தம்மோடு வேருய் நிற்கும் இறைவனைத் தம்மின் வேருகக் கண்டு களித்து ஆடிப் பாடிக் குதூகலிக்கவும், தம்மோடு உடனுய் நிற்கும் இறைவனேடு தாமும் வேறற நின்றுஅவன்குணங்கள் தங்குணங்களாகப் பெற்று அநுபவிக்கவும் வாய்ப்பான ஒருதெளிவு நிலை இப்பொழுது அவர்களுக்கு வாய்த்து விடுகின்றது. முன்னைய நிர்மூட நிலைக்கு நேர் எதிரானது இத்தெளிவு நிலை. முன்னையது முழுமலநிலை; பின்னையது நிர்மலநிலை.

கிடையாக் கிடைப்பாய்த் தமக்குக் கிடைக்கும் இந்நிர்மலநிலையில் தாம் ஆவலுற்றணைந்த சிவத்தை அநுபவிக்க வேண்டியமட்டும் அநுபவித்தற்கு அச்சீவன் முத்தர்களுக்கு அங்கோர் தடையுளதாகாது. சிவனும் அந்நிலையில் அவர்க்குக் "காட்டாதனவெல்லாங் காட்டிச் சிவங்காட்டித் தாட்டாமரை காட்டித் தன்கருணைத் தேன் காட்டி" அவர்தம்மை இறும்பூ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறச்செய்வன். அவரும் அவற்றை அனுபவித்து ஆராவின்பத் தழிவில் பெரும்பேறெய்துவர். இந்தக் களங்கமற்ற அநுபவநிலேயே சைவசித்தாந்தத்துக்குரிய தனிச் சிறப்பு நிலையாகும். அந்நிலையின் கண்ணும் இறைவன் காட்டலும் உயிர் காண்டலும்; இறைவன் களிப்பித்தலும் உயிர்களித்தலும் நிகழ் தற்குரியனவேயாம். இதனை அல்லவெனின், அநுபவமுமின்றி முத்தியுமின்றிச் சைவசித்தாந்தமுமின்றி ஒழியும்.

இனி, இறைவன், கண்முதற் புலனாற் காட்சியுமில்லோன் என்னுந் திருவாசகப்பகுதியும் 'ஊனக்கண்பாசமுணராப்பதி' என்னுஞ் சிவஞானபோதமும் இவ்வுடற்கண்ணாகிய ஊனக்கண்ணால் இறைவனைக்காணுதல் முடியாதென்னும். எனினும், 'ஞானக் கண்ணினிற் சிந்தைநாடி' என்னுஞ் சிவஞான போதமும் அப்பொருள்படவரும் பல்வேறு திருமுறைப் பகுதிகளும் ஞானக்கண்ணால் அவனைக் காணுதல் முடியுமென வலியுறுத்தும்.

இது இங்ஙனமாக, சீவன் முத்தராயிருக்கும் ஞானிகள் இறைவன் தம்மோடொன்றாயும் வேறாயும் உடனாயும் நிற்குமாற்றைக் காண்பரெனின் அவர்தாம் காணுமாறுயாங்ஙனம்? அவர்தம் அகக் கண்ணால் மட்டுங் காண்பர் என்பர் ஒருசாரார். இல்லை, அவர் தம் அகக்கண்ணாலும் புறக்கண்ணாலும் காண்பர் என்பர் ஒருசாரார். அகக்கண்ணாற் காண்பதுபற்றி ஆட்சேபமில்லை; புறக்கண்ணாற் காண்பரோ என்பதே இங்குத் தீர்மானிக்கவேண்டியதென்பர் மற்றொருசாரார். அகக்கண்ணென்பனவெல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாம் ஞானக்கண், புறக்கண்ணென்பனவெல்லாம் ஊனக்கண் என்று கொண்ட கருத்தினுல் இவர்கள் இங்ஙனம் மயங்குபவராவர்.

இத்தொடர்பில் ஊனக்கண் ஞானக்கண் என் பவற்றினியல்பு சற்றே சிந்தித்துணரற்பாலதாம், ஊனம் - குற்றம். குற்றப்பாட்டொடு கூடிய காட்சியையுடைய கண்யாது அது ஊனக்கண். ஞானம்-மெய்யறிவு. மெற்யறிவோடு கூடிய காட்சியை யுடையகண்யாது அது ஞானக்கண் என்பதே அவற்றின் செம்பொருளாம். அஃதாவது:- மனமாயை யின் இயல்பாகிய சந்தேக விபரீதத் தன்மைகளும், ஆணவத்தின் இயல்பாகிய, 'நான் காண்கின்றேன்' என்னும் அகங்காரத்தன்மையுமென்னும் இவற்ருெடு கூடுதல் காட்சியின் குறைபாடு. அக்குறைபாட்டோடு கூடிய காட்சியையுடையனவாகிய கண்ணெல்லாம் ஊனக்கண்களாவன. அங்ஙனமன்றி, குறித்த மன மாயையும், ஆணவமுங் கெட்டநிலேயில் தோன்றும் அறிவு மெய்யறிவு. அந்த மெய்யறிவுக் காட்சியோடு கூடிய கண்கள் ஞானக்கண்களாவன. இங்ஙனமாத லின், தகுதிகெட்ட அகக்கண்ணே ஊனக்கண்ணுத லுங்கூடும்; தகுதிபெற்ற புறக்கண்ணே ஞானக்கண் ணுதலுங்கூடும். எனவே, ஊனத்தன்மையும் ஞானத் தன்மையும் வெறுமனே கண்களைப் பொறுத்தன வாகா; அவற்றைத் தாங்கியுள்ள உயிர்களின் தகுதி யைப் பொறுத்தனவேயாம் மனமாயையும் ஆண வக் கோணும் நீங்காத உயிர்களின் கண்கள் ஊனக் கண்கள்; அவை காணுங் காட்சி ஆணவக் காட்சி. குறித்த இருகுறையும நீங்கிய உயிர்களின் கண்கள். ஞானக்கண்கள் அவைகாணுங் காட்சி ஞானக்காட்சி என்பது இதனுற் பெறுதும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே,

''ஆள வுடைக்கழற் சிற்றம்பலத்தர னுடல் கண்டாற்
பீழை யுடைக்கண்க ளாற்பின்னைப் பேய்த்தொண்
[டர் க்காண்பதென்னே'

''இனித்தமுடைய எடுத்தபொற் பாதமுங் காணப்
[பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவதேயிந்த மாநிலத்தே''
- அப்பர் சுவாமிகள்.

'காலகாலனைக் கம்பனெம் மானைக்
காணக் கண்ணடி யேன்பெற்ற வாறே''
- சுந்தரமூர்த்தி சுவாமிகள்.

''திருவீழி மிழலை வீற்றிருந்த கொற்றவன்
தன்னைக் கண்டுகண் டுள்ளங் குளிரவென் கண்
குளிர்ந்தனவே''
- திருவிசைப்பா.

எனவரும் அருள்ஞானப் பனுவல்கள் கூறுவ தெல்லாம் சீவன் முத்தர்களாகிய அப்பெரியார்க ளனைவரும் இறைவனைத்தம் புறக்கண்ணுற் கண்ட வாற்றையே தெரிவிப்பனவாம், "உள்ளங்குளிரக் கண் குளிர்ந்தன,'' எனத் திருவிசையப்பாவுடையார் இரண் டனையும் ஒருங்குவைத்துக் காட்டுமாறு உற்றுண ர்வாருள்ளத்தை ஒருங்கே குளிர்விக்குந்திறம் உள்கி உள்கி உவக்குந் தரத்ததாகும். அங்ஙனமாதலின்,

திருவாசகத் திருப்படையாட்சியின் கண்வரும்
'கண்களிரண்டும் அவன் கழல் கண்டு
களிப்பன வாகாதே..................
மீன்வலை வீசிய கானவன் வந்து
வெளிப்படு மாயிடினே'' என்னும் பாடற்பகுதிக்கு யாம் கொள்ளத்தக்க பொருள்யாது?

நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நந்தி தேவராகிய சுறுமீனைப் பிடிப்பதற்கு வலை வீசிய பரதவராகும் சோமசுந்தரப் பெருமான் எம் முன் வெளிப்பட்டுத் தோன்றுவாராகில் அடியேன் கண்களிரண்டும் அவர்தம் திருவடிகளைக்கண்டு களிப் பனவாகும். என்பதே கொள்ளத்தக்க பொருளாம். குறித்த தொடரில் 'ஆகாதே' என்றமொழி ஆகாது+ஏ என்ற இருசொற் புணர்மொழியாம். ஆகாது என்ற எதிர்மறையை ஏகாரம் எதிர்மறுக்க ஆகும் என உடன்பாட்டிற் பொருள்தோன்றிற்று.

இத்திருவாசகச் செழும்பனுவலைத் தந்தருளிய எம் மாணிக்க வாசக சுவாமிகள் சித்தமல மறுத் துச் சிவமானவர்; சீவன் முத்தருட் சீவன் முத்தர். அகச்சான்றுனும் புறச்சான்றுனும் அறுதியிடப்பட்ட உண்மை இதுவாகும். அத்தகைய சுவாமிகளிடத்தில் ஊனக்கண்ணுவது ஆணவக் காட்சியாவது அது பற்றிய சார்பாவது சார்பின் சாயலாவது உளதாதல் செல்லாது. அவர்தாம், தம் கண்கள் இறைவனைக் கண்டு களிப்பனவாகும் எனக் கூறியருளினுர் எனக் குறித்த தொடர்க்குப் பொருள் கொள்ளின் அது அவர்க்கு ஆணவக்காட்சியாம், அக்காட்சி அடிகளின் மேன்மைக்கிழுக்காம் எனக் கிஞ்சித்தேனும் அஞ்சு தற் கிடனின்று

அங்ஙனமாகவும், இச் செய்யுட்பகுதிக்கு, நந்தி தேவராகிய சுறுமீனைப் பிடிக்க வலைவீசிய பரதவரா குஞ் சோமசுந்தரப்பெருமான் எம்முன் வெளிப்படு வாரேயாணுல் கண்களிரண்டும் அவன்கழலைக்கண்டு களித்தலைச் செய்யா. எனப் பொருள் கூறுவாரு முளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் கருத்துக்கு ஆதாரமாக அவர்கூறும் விளக்கம் வருமாறு:-

இறைவன் குருவடிவாய் வந்து உண்மையுணர்த்த சிவோகம் பாவனை செய்து அதன் பயனாய் எல்லாஞ் சிவன்செயலே என அமைந்து உயிர் ஆனந்த நிலையில் இருக்கும். 1. அந்நிலையிற் காண்பவனுஞ் சிவமாய்க் காணப்படும் பொருளுஞ் சிவமாய்க் காணும் அறிவுஞ் சிவஞானமாய் இருத்தலால் ஆன்மா சிவத்தைக் காணுதல் என்ற பேச்சுக்கே இடமில்லை. ஆதலினாலேதான் சிவானுபூதிமானாகிய மாணிக்கவாசகப் பெருமானார், 'கண்களிரண்டும் அவன் கழல்கண்டு களிப்பன வாகாதே' என்றருளினார்.

அங்ஙனமன்றி, 2. ஆன்மா குருவினால் உபதேசிக்கப்பட்ட பின்னரும் தான் சிவனைக் காண்பதாய் இருக்குமானால் அப்பொழுதும் ஆணவத் தாக்குதலும் வினைமுனைப்புமிருந்தன வெனப்பட்டு அந்நிலை ஆணவ அநுபவமாகுமன்றிச் சிவானுபவமாகா தென்க. 3. திருப்படையாட்சியின் உட்பொருள் சீவோபாதி ஒழிதல் என்றுள்ளது. எப்பொழுது ஆன்மா உடம்பெடுக்கத் தொடங்கியதோ அப்பொழுது முதலே 'நான் அறிகின்றேன், நான் செய்கின்றேன், நான் அநுபவிக்கின்றேன்' என்று கருதி அவ்வாறு தொழிற்பட்டு அளவில்லாத காலம் உழன்றது. அவ்வித கருத்தும், முயற்சியும், துன்பமும் விடுபட்டுச் செயலற்றுச் சும்மாவிருக்கும் நிலையைச் சிவோகம் பாவனையின் பின்னரே எய்துகின்றது. அங்ஙனம் 4. சும்மா இருக்கும்போது கண்களிரண்டும் அவன்கழல் கண்டு களித்தல் ஆகாமை உண்மைதானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறித்த விளக்கப்பகுதியில் நான்கு அம்சங்கள் நம் கவனத்துக்குரியனவாகும். அவற்றின் பொருந்து மாற்றினைக் குறித்துச் சற்றுச் சிந்தித்து மேற்செல் வாம்.

குறித்த அம்சங்கள் நான்கும் சீவன் முத்தி நிலையில் உயிரின் பிரகாசம் ஒருவகையில் ஒடுக்கி விடப் பட்டுவிடும் என்ற கருத்தைத் தோற்றுவிக்கின்றன. அத்துடன், சீவன்முத்தரென்போர் சிவத்தையநுபவிக் குஞ் சுதந்திரந்தானுமின்றிப் பாடாணவாதிகள் கூறு வதுபோன்று சும்மா செயலற்றுக் கிடப்பவர்கள் என்ற அபிப்பிராய மொன்றை நிழலாடவுஞ் செய் கின்றன.

தானே அருள்வசப்பட்டு நின்று சீவன்முத்த நிலையில் சிவங்காட்டச் சிவத்தை யநுபவித்தற்குரியது ஆன்மாவாகும். அவ்வாறாகவும் அந்நிலையில், 'ஆன்மா சிவத்தைக்காணுதல் என்ற பேச்சுக்கே இடமில்லை யென்றல், 'முத்தியிலும் மூன்று முதலும்' எனப்பிரஸ் தாபிக்கப்பட்ட மூன்றினில் ஒன்றாகிய ஆன்ம உண் மையை அடியோடு மூடிமறைப்பதாகின்றதன்றோ? வினைமாசுகழிந்து ஆணவக்கோணும் அகலப்பெற்ற சுவாமிகள் தம் சீவன்முத்தநிலையிற் 'கண்களிரண் டும் அவன் கழல்கண்டு களிப்பனவாகும்' என உடம் பாட்டாற் கூறினரெனில் அது அவர்க்கு ஆணவத் தாக்குதலும் வினைமுனைப்புந் தீராமையைக் காட்டி விடும் என்று கோடற்கு இயைபும் ஏதும் உண் டாமோ? ஆமாயின், அவர் 'அது ஆகாது' என எதிர் மறையாற் கூறுதலும் அவர்க்கு அத்தாக்குதலும் அம்முனைப்புத் தீராமையும் காட்டிவிடும் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடற்குத் தடையென்னையோ? ஆகுமென்பதற்குத் தான் முனைப்பு வேண்டும், ஆகாதென்பதற்கு முனைப்பு வேண்டுவதில்லை என்ற ஒழுங்கும் எங்கேனும் உளதாகுமோ? அன்றியும் பதிகக் குறிப்பிற்கேற்ப அந்நிலையிற் சுவாமிகளின் நிலை சீவோபாதி ஒழிதல் எனின் அவர் சிவத்தைக் காண்டலுங் களித்தலுங் கூடச் சீவோபாதியின் பாலதாகுமோ? அங்ஙனேல், சுவாமிகள் இதற்குமுன்னெல்லாம்,

"அத்தா நின்னைக் காண ஆசைப்பட்டேன்
கண்டா யம்மானே.''

"ஊறிநின் றென்னுள் எழுபரஞ் சோதீ
யுள்ளவா காணவந் தருளாய்'' என்றுங்குப் பலபடக் கூறியனவெல்லாம் சீவோபாதியினுற் புகன்ற வேதனை வார்த்தைகளாகி அவையெல்லாம் திருவாசகங்களல்லவாம் நிலையேற்படுமோ? இன்னும், செயலற்றுச் சும்மாவிருக்கும்நிலை அப்பொழுது சுவாமிகளின் நிலையெனின் சிவத்தைக்கூடக் காணுமலுங் களியாமலும் இருப்பதென்ற நிர்ப்பந்தமும் அதன்கண் உளதாகுமோ? அது அங்ஙனமேல் இந்தச் சீவன் இத்துணையும் உழந்த உழப்புக்கும் உழைத்த உழைப்புக்கும் ஊதியந்தான் யாதாருமோ? என இவ்விளக்கக் குறிப்புப்பற்றி நிகழும் ஐயங்கள் அளப்பிலவாம். அவையனைத்துஞ் சீவன்முத்தர் நிலையை ஒருவர் தேருவண்ணம் மயக்குவனவேயன்றித் தெளிவுதரும் வாயில்களாதலில்லையென்றொழிக.

மேலும், சுவாமிகள் 'கண்களி......காதே' எனக் கூறும் வார்த்தையின் கண்ணேயே, தாம் அதனை உடம்பாட்டுப் பொருளிற்றுன் கூறுகின்ருர் என்பத

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னைக் குறிப்பாலறிவுறுக்கும் நயமுமொன்றுகாணத்தக்கது.

ஒருவர் தம் வார்த்தையை உடன்பாட்டுவினையால் முடியக்கூறிக் கருத்தின் உடன்பாட்டைத் தெரிவிப்பது ஒருவகை. அதனை எதிர்மறை வினையால் முடியக்கூறிக் கருத்தின் உடன்பாடின்மையைத் தெரிவிப்பது ஒருவகை. ஓரெதிர்மறை வினையோடு இன்னோரெதிர்மறைச் சொல்லையடுத்து அவற்றால் வார்த்தையை முடியக்கூறி அவ்வாற்றானுங் கருத்தின் உடன்பாட்டைத் தோற்றுவிப்பது மற்றொருவகை.

உடன்பாட்டு வினையாற் கருத்தினுடன்பாட்டைத் தெரிவிப்பது அவ்வுடன்பாட்டுக் கருத்தை வெளியிடுமளவுக்கேயமையும். இரண்டெதிர்மறைகளால் கருத்துடன்பாட்டைத் தோன்றவைப்பது கருத்துடன்பாட்டைத் தெரிவிப்பதுடன் வற்புறுத்தலாகவுமமையும்.

உலகவழக்கில் 'அவன் வருவான்' என்பது சாதாரண உடன்பாடு. 'அவன் வராமல் விடான்' என்பது வருதலின் தவறாமையைச் சுட்டும் வற்புறுத்தலோடு கூடிய உடன்பாடு.

இங்ஙனமே சுவாமிகள் வார்த்தையிலும் ஆகாது+ஏ என இரு எதிர்மறைகள் கூடி உடன்பாட்டுப் பொருளில் வந்துள்ளமை, காணுதலின் நியதத்தை வற்புறுத்துதற்பாலதாம். அன்றியும், சீவன்முத்தரின் கண்கள் சிவன் கழலைக் கண்டு களிப்பனவாகா என்னுங் கொள்கையும் சிலர்க்கு உண்டென்பதை முன்னர் உய்த்துணரவைத்துப் பின் உண்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யைத் தேற்றியவாறுமாம்.

இவ்வெல்லா வகையானும் நோக்குங்கால் குறித்த திருவாசகத் தொடரின்கண் வந்த ஏகாரம் எதிர்மறை ஏகாரமே. பிறர் கருதுவதுபோன்று அசை நிலை ஏகாரமன்று என்பதுதெளியக்கிடக்கின்றது.

இனி, இத் திருப்படையாட்சியின் முதலாஞ் செய்யுளில் யாம் இதுவரை யாராய்ந்த முதலாவது வார்த்தையையடுத்து வருவது, 'காரிகை யார்கள்தம் வாழ்விலெம் வாழ்வு கடைப்படு மாகாதே' என்னும் வார்த்தையாகும். இங்கு இவ்வார்த்தையின் முக்கியத்துவமே முதற்கண் நம் கவனத்துக்குரியதர்கும். மேற் குறித்தவாறு திருப்படையாட்சிப் பாட்டுக்களில் ஆகாதே ஆகாதே என வருஞ் சொற்களுக்கெல்லாம் ஆகாது ஆகாது என உரைகாணச் சிலர் முயன்றமைக்கு முற்றிலும் பொறுப்பாளியாயிருந்தது இவ்வார்த்தையே என்பது இதற்குரிய முக்கியத்துவங்களுக்குள் முதன்மையானது. அத்துடன் முதலாம் பாடலில் வரும் இவ்வார்த்தைக்கினமான வார்த்தைகள் இப்பதிகத்தில் 3ஆம், 6ஆம், 7ஆம், 8ஆம், பாடலகளிலும் வந்துகொண்டிருத்தல் இதன் முக்கியத்துவங்களில்இரண்டாவதாகும். அன்றியும், சீவன் முத்தருடைய தீரம் எத்தகையதென்பதை ஒருவர் உணர்ந்து கொள்வதற்கு உரைகல்லாய் நின்று சைவத்தனிநெறிவழித் தோன்றுஞ் சீவன்முத்தரின் சிறப்பியல்பைத் துலக்கி நிற்பதும் இவ்வார்த்தையின் மற்றெருரு முக்கியத்துவமாகும். மேலும், சைவப் பெருநெறிதந்த திருநெறித் தலைவராகிய சுந்தர மூர்த்தி சுவாமிகளின் வரலாற்றுண்மைக்கு அசைக்கலாகாத அத்தாட்சியாய் நின்றுகொண்டிருப்பது இவ்

வார்த்தையைச் சாரும் குறிப்பிடத்தக்கதொரு முக்கியத்துவமாகும். இன்னும், பதிகப்பெயராகிய படையாட்சி யென்னுந் தொடரின் பொருட்பொறுப்பைத் தாங்கிநிற்கும் அச்சாணியாய்த் திகழ்ந்து நிற்பது இவ்வார்த்தையின் வேறுமோர் முக்கியத்துவமாகும்.

முன்னைய வார்த்தைக்குப் பொருள்கொண்டவாறே இவ்வார்த்தையில் வரும் ஆகாதே என்னுஞ் சொற்கும் ஆகும் என்று பொருள்கோடலே பொருத்தமாவது. அங்ஙனம் கொள்ளுதலாற் சீவன்முத்தரியல்பு மேலுஞ் சிறக்குமேயன்றிச் சற்றுங் குறைவுபடுமாறில்லையென்க. என்னை, ஆண்டானடிமைத் திறம் பேணி எச்செயலும் அவன்செயலேயென அமைந்து நிற்குஞ் சீவன்முத்தரொருவர் ஆண்டவனருளால் தாம் ஒரு பெண்ணைச் சாரநேரினும் அதன்பாற் சங்கற்ப விகற்பம் பண்ணுதலின்றி வந்தவாறே பெற்று அதுவும் ஆண்டவனருளென அமர்ந்திருக்குங் கடப்பாடுடையர். இது சீவன்முத்தராவாரெல்லோர்க்குங் கண்டிப்பாக நேர்வதுமாகாது. 'ஆட்பாலவர்க்கருளும் வண்ணமும் ஆதிமாண்புங் கேட்பான்புகிலளவில்லை' என்றமைக்கியைய அவரவர் தகுதிநோக்கி ஆண்டவன் புரிந்தருளுங் கருணைத்திறத்தின் வேறுபாட்டையொட்டிச் சிலர் சிலருக்கே வாய்ப்பது. அங்ஙனம் வாய்க்குமதனைச் சீவன்முத்த ரொருவர் அஞ்சி அருவருத்தொதுக்கி யொதுங்குவரெனின் எல்லாம் இறைவன் செயலென நிற்கும் தம் நிலையினின்று வழுவுபவராவர். வாய்த்த அதன் வயப்பட்டு மயங்குவரெனின் தம் பொறியடக்க நிறையினின்று நழுவுபவராவர். அன்றியும் அதன்பால் விருப்பு வெறுப்பு நிகழ அதற்குத் தாமாளாவரெனின் இருவினையொப்பு இன்னமுங் கைவரப்பெறுதோராவர். இத்தகைய எத்தவறினுக

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கும் இடமின்றித் தம் நிலைக்குத் தளர்வேற்படாமலும் கிடைத்த அதன் மாயையில் அமிழ்ந்தி விடாமலும் அநுசரித்துத் திருவருள்நெறியைப் பேணிநிற்குந் தம் தனித்துவப் பண்பிலேயே சீவன்முத்தரொருவரின் பெருமை கொலுவீற்றிருப்பதாகும்.

இங்ஙனம் சீவன்முத்தரொருவர் குறித்த இச்சந்தர்ப்பத்தினுந் தம்நிலை தவறார்; அதனாற் பந்தமுறார் அவர்தம் சிவானுபவமும் இடையீடுறாது என்ற வாய்மை சிவஞான சித்தியார் பத்தாஞ் சூத்திரத்து இரண்டாம் அதிகரணத்தான் இனிது விளக்கப்படுமாற்றைக் கண்டுணர்வோமாக.

"எங்கித்தைக் கன்மமெலாஞ் செய்தாலும் ஞானிக்
கிருவினைகள் சென்றணையா"

"ஏடுதரு மலர்க்குழலார் முலைத்தலைக்கே யிடைக்கே
எறிவிழியின் படுகடைக்கே கிடந்து மிறைஞானங்
கூடுமவர் கூடரிய வீடுங் கூடிக்
குஞ்சித்த சேவடியுங் கும்பிட்டே யிருப்பர்"
(சிவஞானசித்தியார் 10.2.5.)

இனி, சுந்தரமூர்த்திசுவாமிகளுக்குப் பரவையார் சங்கிலியார் தொடர்பு திருவருளாலேயே நிகழ்ந்ததென்றல் கூறவேண்டுவதன்று. அவ்விருவரையும் அவர் கண்டதும் திருவருளின் வண்ணமாகவே; மணந்துகொண்டதும் திருவருளின் உபகாரத்தினாலேயே; அவர்தம்மைச் சுவாமிகள் கூடிக் கலந்தமையும் சிவயோக சாதனையாகவே என்பதற்கு அவர்தம் தேவாரப் பனுவல்கள் அகச்சான்ருகவும் திருத்தொண்டர் புராணம் புறச்சான்ருகவு முள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மாழை யொண்கண் பரவையைத் தந்
தாண்டானை மதியிலா
ஏழையேன் பிரிந்திருக்கேன் என்னாரு ரிறைவனையே''

''பண்ணமர்ந்த மொழிப்பரவை சங்கிலிக்கும் எனக்கும்
பற்றாய பெருமானை மற்றாரை யுடையேன்''
- (சுந்தரமூர்த்திசுவாமிகள் தேவாரம்.)

''வந்து மால்செய்து வல்லியி னெல்கியின்
றெந்தை யாரருள் எந்நெறிச் சென்றதே''

தென்னாவ லூர்மன்னன் தேவர்பிரான் திருவருளால்
மின்னாருங் கொடிமருங்கிற் பரவையெனும்
[மெல்லியல்தன்
பொன்னாரும் முலையோங்கற் புணர்குவடே சார்பாகப்
பன்னாளும் பயில்யோகம் பரம்பரையின் விரும்பினார்
- (பரவையர் திருமணம். பெரியபுராணம்.)

இவ்வாறெல்லாம் பரந்துபடநோக்கி ஆராயு மிடத்து 'காரிகையார்கள்தம் வாழ்விலெம்வாழ்வு கடைப்படு மாகாதே' என்ற வார்த்தைக்கு பெண்களோடு சேர்ந்து வாழும்வாழ்வில் எம்வாழ்வு கடைப்படுதலும் ஆகும் என்று பொருள் கோடலே நேரியதுஞ் சீரியதுமாதல் இனிது விளங்கக் கிடப்பதொன்றாகும்.

இஃதுணராது, இங்ஙனம் பொருள்கொண்டுவிடுதல் சீவன்முத்தர் நிலைக்கு இழிவுச்சாயல் தருவதாம் என அஞ்சிப்போலும் இவ்வார்த்தைக்கு உரைகாணுங்கால் 'பெண்கள் வாழ்வில் எம்வாழ்வு கடைப்படுதல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகாது எனப் பொருள் கூறுவார் சிலர். என்னே! என்னே! சீவன்முத்தர்கள்பால் இவர்க்குளதாம் பெருங் கருணை! தண்ணீருட் கிடந்தாற் கிடைச்சி நீரூறி விடப்போகிறதே என்று அஞ்சுவாரும்; குதிரை எழுந்து பாய்கிறது, பாகன் விழுந்துவிடப் போகிருனே என்று அஞ்சுவாரும், தூசி மேலெழுகின்றது ஆகாசம் பழுதடைந்துவிடப்போகிறதே என்று அஞ்சுவாருமன்றி வேறுயாரும் இவர்தமக் கொப்பாவாரிலர் என்க. இப்பெருங் கருணையாளர் யாம் முன் குறிப்பிட்டமைக்கேற்ப சீவன்முத்தர்களைத் தாம் முறைகேடாகக் கையாளுஞ் சாஸ்திர விதிகளுக்குட் சிறை வைக்காதிருப்பாராயின் அதுவே போதும், அமைவாராக.

இன்னும், இத்திருப்படையாட்சியில் இவ்விரு வார்த்தைகள் போல் மேலும் ஐம்பத்துநான்கு வார்த்தைகள் உள. அவை அனைத்தினுக்கும் உடன்பாட்டுப் பொருள்பட உரைகோடலே உகந்ததாம். அன்றேல், சீவன்முத்தரொருவர் விபூதிபூசலாகாது, திருவைந்தெழுத்தோதுதலாகாது, சிவன் தம்முன் வந்தாலுந் தாமெழுந்து கும்பிடுதலாகாது என்றுகூட விபரீதப்பொருள்கண்டு சிவஞானியின் இலட்சணத்தைச் சீர்கெடுப்பாராய் முடியும். ஆகலின், சைவ சித்தாந்த சாஸ்திரதோத்திர அநுபவ உண்மைகளுக்கு இயையத் திருப்படையாட்சிக்குப் பொருள்கொண்டு உய்ந்தீடேறல் உத்தமர்களாகிய நம்மவர் கடனாகும். கட்டுரைச் சுருக்கங்கருதி இவ்வளவில் அமைகின்ருேம்.

திருச்சிற்றம்பலம்

பிரிவு
மாநகர நூல் சேவை
யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம்
திருச்சிற்றம்பலம்

# வாதவூரர் வரலாற்றுக் குறிப்பு

புலவர் பாண்டியனார், கொழும்பு.

திருவாசகச் செய்யுளில் வரும் மணிவார்த்தை யென்னுஞ் சொற்றொடரிலிருந்தே திருவாதவூரடிகட்கு மாணிக்கவாசகரென்னும் அருமைப் பெயர் சூட்டி மகிழ்ந்தது திருநெறிய தமிழுலகம்.

இறைவனது திருவாய் மொழியை மணிவார்த்தையென்கின்றார் வாதவூரடிகள்.

"சிந்தனைநின் றனக்காக்கி நாயி னேன்றன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக் காக்கி
வந்தனையு மம்மலர்க்கே யாக்கி வாக்குன்
மணிவார்த்தைக் காக்கியைம் புலன்க ளார
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்த விச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையே யுன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனைய மேனித்
தனிச்சுடரே யிரண்டுமிலித் தனிய னேற்கே"

என்னுந் திருப்பாட்டிலே அடியார்க் கெளியன் சிற்றம்பலவன் வாதவூரடிகள் கோலத்திருந்து அவர் தம் வாய்கொண்டு அவர் பாடுமாறுபோலத் தான் பாடியருளியனவே திருவாசகப்பாடல்களுந் திருக்கோவைப் பாடல்களுமென்னுஞ் செய்தி வெளியிடப் பட்டுள்ளது அன்றியும் இதற்கு,

"அன்றே யென்ற னாவியு முடலு முடைமை யெல்லாமுங்
குன்றே யனையா யென்னையாட் கொண்டபோதே
கொண்டிலையோ
இன்றோ ரிடையூ றெனக்குண்டோ வெண்டோண்முக்க
ணெம்மானே
நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோவிதற்கு
நாயகமே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுந் திருப்பாடலும் நல்லவிளக்கந் தருகின்றது. அடிகள் போலவே திருமூலரும் திருநாவுக்கரையரும் நம்மாழ்வார் முதலாயினுரும் தம்பாடல்களை இறைவன் கூற்றெனக் கூறுவர்.

திருவடித் தொண்டராயினுர்திருவருளிலே மூழ்கி அயர்வெய்திய நிலையில் அவர்களின் செயலற்ற உடல் பொறிகளை இறைவன் ஏனையுயிர்களுய்தற் பொருட்டுப் பயன்படுத்திக் கொள்ளல் இயல்பேயாம்.

அங்ஙனம் வந்த இறைவன் வாய்மொழியை மணிவார்த்தை யென்றது எத்துணைப் பொருத்த முடையதென்பது ஆராய்தற்குரியது. இங்குக்கூறிய மணி மாணிக்க மணியென்பது மாணிக்கவாசகரென்னும் பெயர் வழக்குக் கொண்டு துணியப்படும்.

ஒன்பான் மணியுள்ளும் மாணிக்கமணி தலை சிறந்தது. புலவர் வாய்மொழி பலவற்றுள்ளும் இறைவன் வாய்மொழி தலைசிறந்தது. தன்னை அரிதிற் பெற்ருர்க்கு நல்லொளியும் நோயின்மையும் ஆக்கமும் வென்றியும் பயக்கு மாணிக்கம்போல இறை திருமொழியுந் தன்னை அரிதிற்பெற்ற அன்பர்க்குத் திருவருளொளியையும் வினையின்மையையும் இறைவனுதலையும் தொல்லிருள் வென்றியையும் பயக்கும். கிடைத்தற்கரிய மாணிக்கங் கிடைக்கப்பெற்ருர்க்கு உள்ளம் இடையீடின்றி மாணிக்கத்தின்மேலேயிருந்துவப்பெய்தும். இறை திருமொழி பெற்ருர்க்கு உள்ளம் இடையீடின்றி அம்மொழிப் பொருண்மேலே நின்று பேருவகையெய்தும். நல்வினையுடையாராற் பெறற்பாலது மாணிக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருந்தவமுடையாரார் பெறற்பாலது மணிவார்த்தை. மாணிக்கம்தன்னைக் கண்டார் தன்மேல்வைத்த கண் வாங்காதவாறு தடுத்துக் கவருந்தன்மையுடையது. திருவாசக மணிவார்த்தைகளுந் தம்மைச் சொன்னார் சொல்லிக்கொண்டேயிருக்கச் செய்யுங் கவர்ச்சியுடையன. சுவைமிக்கன. சொல்லச் சொல்லக் கேட்டார் தம்முள்ள முருக்குந் தெய்வத்தன்மை வாய்ந்தன.

இங்ஙனஞ் சிறந்தமணிவார்த்தையை வெளியிட்டதனாலே மாணிக்கவாசகராயின செய்திபோல அடிகளுடைய வேறு சிலவரலாற்றுக் குறிப்புகளுந் திருவாசகத்திலே அகச்சான்றுடையவாகின்றன.

திருப்பெருந்துறையிலே குருந்தடியிலே தம்மை ஆட்கொண்டருளிய அண்ணலார் தந் தில்லைப் பொதுக்கூத்துக்கு எழுந்தருளும்பொழுது தம்மைப் பிரிதலாற்றாத ஏனை அணுக்கரையெல்லாம் "முன்னுள்ள பொய்கையிலே நெருப்புத்தோன்றும்; அதனில் நீயிரெல்லாம் மூழ்கி எம்மையடைவீராக" வெனவும் வாதவூரரை மட்டும் நீ சின்னாள் இங்கிருந்து நிகழவேண்டிய சில செய்திகள் நிகழ்ந்ததன்பின்னர்த் தில்லையிலே நம்மை வந்தடைவாயாக வெனவும் பணித்தருளி மறைந்தருளினார் என்ற செய்தி வழங்கப்படுகின்றது. இதனுள் வாதவூரரா ரளவில் உண்மையென்பது,

"நாயி னேனை நலமலி தில்லையுட்
கோல மார்தரு பொதுவினில் வருகென
ஏல வென்னை யீங்கொழித் தருளி"

எனவருந் திருவண்டப்பகுதி யடிகளாற் பெறப்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் ஏனை அணுக்கர்கள் பொய்கை நெருப் பிற் குளித்து இறைவனையடைந்தார் என்ற செய்தி பொய்யென்பது பின்வருமடிகளாற் பெறப்படுகின் றது.

"அன்றுடன் சென்ற அருள்பெறு மடியவர்
ஒன்ற வொன்ற வுடன்கலந் தருளியும்
எய்த வந்திலாதா ரெரியிற் பாயவும்
மாலது வாகி மயக்க மெய்தியும்
பூதல மதனிற் புரண்டுவீழ்ந் தலறியுங்
கால்விசைத் தோடிக் கடல்புக மண்டி
நாத! நாத! என்றழு தரற்றிப்
பாத மெய்தினர் பாத மெய்தவும்
பதஞ்சலிக் கருளிய பரம நாடகவென்
றிதஞ்சலிப் பெய்த வேங்கின ரேங்கவும்
எழில்பெறு மிமயத் தியல்புடை யம்பொற்
பொலிதரு புலியூர்ப் பொதுவினில் நடநவில்
கனிதரு செவ்வா யுமையொடு காளிக்
கருளிய திருமுகத் தழகுறு சிறுநகை
இறையவ னீண்டிய அடியவ ரோடும்
பொலிதரு புலியூர்ப் புக்கினி தருளினன்
ஒலிதரு கயிலை யுயர்கிழ வோனே"

இதனுள் எய்தவந்திலாதார் எரியிற் பாயவும் என்ற தனால் அணுக்கரிற்சிலர் பிரிவாற்றாது நெருப்பு வளர்த்து அதனுட் பாய்ந்து உடல்விட்டனரென்று தெரியவருகின்றது. இந் நெருப்பு, பொய்கை நெருப் பென்று கொள்ளுதற்குரிய குறிப்பொன்றுமில்லை. ஒன்ற ஒன்ற உடன்கலந்தருளி என்றதனால் ஒருசிலர் சிவயோகவொடுக்கத்திலிருந்து யாக்கை நீத்தனரென் பது பெறப்படும். ஏங்கினரேங்கவும் என்றதனால் ஆசிரியன் பிரிவுகாண்டலும் உடனுடல் விட்டாரு முளரென்பது தோன்றும். சிலர் உயிர்போகாமல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழுதுகொண்டும் மயக்கமெய்தியுமிருந்தார். சிலர் அழுதாற்றிக்கொண்டிருந்து பட்டினிகிடந் துடல் விட்டனர்.

ஆசிரியன் பணியைக் கடக்க அஞ்சியே அவனது பிரிவாற்ருத வாதவூரரும் யாக்கைநீத்திலர்.

மேற்கூறியவாற்ருன் அவ்வணுக்கரெல்லாம் சிவபெருமான் கூட்டிக்கொண்டு வந்த சிவகணத்தா ரல்லரென்பதூஉம் குருந்தடி யாசிரியனுவான் சிவமே தானுன வோருயிரினுடம்பைக் கொண்டு நின்று செவ்வியணுக்கர்க்குத் திருவருள் காட்டிய சிவனுமென்பதூஉந் துணியப்படும்.

ஒருவர் தம்மைத்தாமே இழித்துரைத்துக்கொள்ளும்பொழுது நாய், குரங்கு என்ருற்போல ஒப்புக் காட்டிக் கொள்ளுவதல்லது யானை, குதிரை என்ருற்போல ஒப்புக்கூறிக் கொள்ளும் வழக்குக் காண்டலில்லை. அங்ஙனமாகவும் வாதவூரடிகள்,

"இருகை யானையை யொத்திருந் தென்னுளக்
கருவை யான்கண்டி லேன்கண்ட தெவ்வமே
வருக வென்று பணித்தனை வானுளோர்க்
கொருவனே கிற்றி லேன்கிற்ப னுண்ணவே"

என்னுந் திருப்பாடலிலே நான் இரண்டுகையுடைய யானைபோன்றிருந்து என்னையே நான் கண்டதல்லது என் உள்ளத்துக்குக்கருவாகிய இறைவனைக் கண்டிலேனெனக் கூறுகின்ருர். இங்கு யானையென்றது இறைவனையன்றென்பது ஒத்திருந்து என்னும் வினையெச்சத்தாலும் இருகையானையென்னும் அடையாலுந் துணியப்படும். படவே அடிகள் உண்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மையாகத் தமது புறத்தோற்ற மிருந்தவாற்றையே கூறி அதுவல்லது தமக்கு அறிவில்லையெனப் பழித்துக் கூறுகின்றாரென்பதே கருத்தாகும். எனவே வாதவூரர் நன்கு பருத்துயர்ந்துள்ள கரியயாக்கை' யுடையவராய் முதலமைச்சரென்றற் கேற்ற தோற்றம் வாய்ந்தவர். இவரது தோற்றத்தைக்கண்டார் இவர் மிகவும் உணவுண்பரென நினைக்கக்கூடுமென்பதுபற்றி உண்ணா கிற்பனெனவும் பழித்தார்.

இனி, "வாதவூரினில் வந்தினி தருளிப் பாதச் சிலம்பொலி காட்டிய பண்பு" கீர்த்தித்திருவகவலில் இறைவன் கீர்த்திகளுளொன்றாகக் கூறப்பட்டுள்ளது. இதனால் வாதவூரிலும் இறைவன் தில்லையிற்போலக் கூத்தர் கோனாகிய கோலத்திற் கோயில்கொண்டுள்ளானென்பது தோன்றும். இவ்வாறு கொள்ளாது பாண்டியன்றனக்குப் பரிமாவிற்கக் கொணர்ந்து வாதவூரிலே தங்கிய குதிரை விலைஞர் கோன், தான் குதிரை கொண்டு வருகின்றமையை வாதவூரிற் பாதச்சிலம்பொலி செய்து மதுரைச் சிறைக் கோட்டத்துள்ள அடிகட்குணர்த்தினானென்பது கட்டியவுரையேயாம்.

"பாண்டி யன்றனக் குப்பரி மாவிற்
றீண்டு கனக மிசையப் பெறாஅ
தாண்டா னெங்கோ னருள்வழி யிருப்பத்
தூண்டு சோதி தோற்றிய தொன்மையும்"

என நரியைக் குதிரையாக்கிய நன்மைக்குப்பின் பாண்டியனுக்குத் தூண்டு சோதி தோற்றியதனைத் தொன்மை யென்றதனால் அவை வாதவூரர் காலத்திலே நடந்தனவல்லவென்பது தோன்றுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவாசகத்தில் எங்கும் நரியைப் பரியாக்கியது சொல்லப்பட்டுள்ளது போலப் பரியை நரியாக்கியது சொல்லப்படாமையால் அது உண்மையன்று போலும்.

பாண்டியன் அடிகளைச் சிறைசெய்து துன்புறுத்தினனென்பதற்குத் திருவாசகத்திற் சிறிதுஞ் சான்றில்லை. வாதவூரர்க்குப் பாண்டியன்மேலுள்ள பேரன்பையும் அவனுடைய இறையன்புப் பெருக்கையும் நோக்குவார்க்குப் பாண்டியன் அடிகளைத் துன்புறுத்திய செய்தியெல்லாம் பொய்யெனவே தோன்றும்.

இன்னுந் திருவாசகத்தில் வரலாற்றுக் குறிப்புகள் ஆராய்தல்வேண்டும்.

திருச்சிற்றம்பலம்

---

திருவாசகத்தை ஓதியும் உருகாத ஓருயிர் இருக்குமாயின் அதனைக் கல்லென்று கழறுதுமோ, அன்றி மண்ணென்று வகுக்குதுமோ, இரும்பென்று இயம்புதுமோ? சொன்மின்கள்!

—பேராசிரியர், மறைமலையடிகள்

IN the deepst sense, therefore, the prayer hf the devout soul is God's own prayer; it is the great God praying through the small heart and weak mouth of man ; "the tongue itself", says Manikkavachagar "wich cries to Thee, nay all the powers of my being which cry to Thee, all are Thine"

-Friedrich Heiler

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவாசகர் கண்ட தில்லை

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான் M.A., I.A.S.

உருத் தெரியாக் காலத்தே
உள் புகுந்து என் உளம் மன்னிக்
கருத்திருத்தி ஊன்புக்குக்
கருணையினால் ஆண்டு கொண்ட
திருத்துருத்தி மேயானைத்
தித்திக்கும் சிவபதத்தை
அருத்தியினால் நாயடியேன்
அணி கொள் தில்லை கண்டேனே

என்பது மணி வாசகர் பாடிய பாடல். திருப்பெருந்துறையிலே குருந்த மரத்தடியிலே தன்னைவலிந்து ஆட்கொண்ட பெருமானை, அப்பெருமானோடு இணைந்து அவர் அருளிய சிவபதத்தின் அருமையை எல்லாம் தான் தில்லையிலே கண்டு கொண்டதாக மணிவாசகர் பாடுகிறார். மணிவாசகருக்குத் திருப்பெருந்துறைக்கு அடுத்தபடியாக தில்லையில் ஈடுபாடு அதிகம் இருந்திருக்கிறது. ஆதலினாற்றான் "தில்லைபாதி திருவாசகத்தில்" என்ற பழமொழியே எழுந்திருக்கிறது.

தில்லை மூதூர் ஆடிய திருவடியிலே அளவிலா ஈடுபாடு உடையவராய் இருந்திருக்கிறார். திருப்பெருந்துறையை விட்டுப் புறப்பட்ட மணிவாசகர் உத்தரகோச மங்கை, திருவிடை மருதூர், திருவாரூர், திருமுதுகுன்றம், திரு அண்ணுமலை எல்லாம் சென்றபின்தான் திருத்தில்லைவந்து அடைந்திருக்கிறார். அங்குதான் திருவாசகத்தை மணிவாசகர் சொல்லச்சொல்ல, சிற்றம்பலவன் ஏட்டில் எழுதினான் என்பது வரலாறு. மேலும் திருவாசகத்திற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரை சொல்லும்படி மணிவாசகரைக் கேட்டபோது, அதன் பொருளாக விளங்குபவன் தில்லையில் நடம் புரியும் திருச்சிற்றம்பலவனே என்று அவனையே சுட்டிக்காட்டி நின்றார் என்பதும் சர்ணபரம்பரை வழக்காக நாம் தெரிந்திருக்கிறோம்.

தில்லையில் வித்தகனார் விளையாடலைக் கண்டு பரவசம் அடைந்த மணிவாசகர் பின்னர் பலநாள் அங்கு தங்கி இருக்கும் நாளில் குலாப்பத்து, திருப்பதிகம், கோயிற் பதிகம், கீர்த்தித்திரு அகவல், திரு அண்டப்பகுதி, போற்றித் திரு அகவல், திருப்பொற்சுண்ணம், திருத்தெள்ளேணம், திரு உந்தியார், திருத்தோணோக்கம், திருப்பூவல்லி, திருப்பொன்னூசல், முதலியவற்றைப் பாடினார். அன்னைப்பத்து, கோத்தும்பி, குயிற்பத்து, தசாங்கம், அச்சப்பத்து இவைகளும் இங்கெழுந்தவையே. இவைகளைப் பற்றி எல்லாம் விரிவாகப் பேச காலமோ நேரமோ இடந்தராது.

தில்லையிலே ஆனந்தக் கூத்தருடைய தாண்டவத்திலே ஈடுபட்டு அனுபூதிபெற்று அசைவற்று நின்றிருக்கிறார். இதை அறியாதமெய்க்காவலர்கள்இவரைக் கனகசபையைவிட்டு கீழே இறங்கச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சொற்களை இவர்செவி ஏற்கவில்லை. சிவானந்தப் பிரகாசத்தில் திளைத்து நின்று 'சிவசிவ' என்றே குரல் கொடுத்திருக்கிறார். அதன்பின் மோன நிலை கலைந்து கோயிலை வலம் வரும்போது கீர்த்தித்திரு அகவல், திருஅண்டப் பகுதி, போற்றித்திரு அகவல் ஆகிய மூன்று அகவல்களையும் சொல்லிக்கொண்டே வந்திருக்கிறார். அதனால்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் சைவத்தமிழ் உலகம், மக்கள் திருக்கோயில் வலம் வரும்போது வீண்பேச்சும் சழக்குரையும் பேசாது இவ்வகவல்களையே பாராயணம் செய்துகொண்டே வரவேண்டும் என்று தீர்மானித்திருக்கிறது. ஆனால் இந்த மரபை நாமெல்லாம் அனுஷ்டிக்கிறோமா என்பது கேள்வி.

கீர்த்தித் திரு அகவலில், அரியொடு பிரமற்கு அளவறியொண்ணாதவனாக, தூண்டு சோதி தோன்றிய தன்மையை நினைக்கின்றார். உத்தரகோச மங்கையுள் இருந்து வித்தக வேடம் காட்டிய இயல்பைப் பாராட்டுகிறார். திருஅண்டப் பகுதியிலோ இன்னிசை வீணையில் இசைந்தோனாக, பிரமன்மால் காணாப் பெரியோனாக, அதே சமயத்தில் பக்தி வலையில் படுவோனாக எல்லாம் இறைவனைக் காண்கிறார். அவன் பஞ்ச பூதங்களிலும் நிறைந்திருக்கிற தன்மையை,

> பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
> நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
> தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
> வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய்போற்றி
> வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி

என்றெல்லாம் விளக்கம் தருகிறார்.

கீர்த்தித்திரு அகவல் முதலிய மூன்று அகவல்களையும் பாடிய பின்னர் மணிவாசகர் தில்லையில் தங்கியிருந்த காலத்து அங்குள்ள பெண்கள் வளைக்கரம் ஒலிக்க, கிண்கிணி மாலைகள் ஒலிக்க, முகத்தில் குறு வெயர்வை பொடிப்ப, விழிபுரள சுண்ணம்

மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடிப்பதைக் கண்டார். அதையே பொற் சுண்ணம் இடிக்கும் பாடல்களாகப் பாடினார்.

முத்தணி கொங்கைகள் ஆட ஆட
மொய் குழல்வண்டினம் ஆட ஆட
சித்தம் சிவனொடும் ஆட ஆட
செங்கையற் கண்பனி ஆட ஆட
பித்தெம்பிரானொடும் ஆட ஆட
பிறவி பிறரோடும் ஆட ஆட
அத்தன் கருணையொடு ஆட ஆட
ஆடப் பொற்சுண்ணம் இடித்து நாமே.

என்னும் பாடல்களைப் படிக்கும்போது சுண்ணம் இடிப்பாரது சுவைமிகுந்த பண்ணோசையும் ஆடிப்பாடும் துள்ளலோசையும் கலந்து நமக்குப் பேரானந்தம் தருகிறது என்றால் வியப்பில்லையே.

வட்டமிட்டுப் பெண்கள் வளைக்கரங்கள்தாம் ஒலிக்க, கொட்டி இசைத்திடும் ஓர் கூட்டமுதபாட்டே தெள்ளேணம் கொட்டுதலாகும். நம்நாட்டில் இதனைக் கும்மி என்றால் மலையாள மக்கள் கைகொட்டிக் களி என்றே இதனை அழைக்கின்றனர். இந்தத் தெள்ளேணப்பாடல்கள் சாதாரணமான எண்ணங்களை மட்டும் பிரதிபலிப்பதாக இல்லை. பெரிய உண்மைகளையே எளிய தமிழில் இனிய சந்தத்தில் இசைத்திடும் பாடல்களாக அமைகின்றன.

வான் கெட்டு மாருதம் மாய்ந்து
அழல் நீர் மண் கெடினும்
தான் கெட்டலின்றிச்
சலிப்பறியாத் தன்மையனுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊன் கெட்டு உணர்வு கெட்டு
என்னுள்ளமும் போய்
நான் கெட்ட வா பாடித்
தெள்ளேணம் கொட்டாமோ

என்று கேட்கும்போது நான் என்னும் அகந்தை நம்மை விட்டு ஓடியதில் ஏற்பட்ட மகிழ்ச்சி தோன்றுகின்றதல்லவா.

தில்லையில் அடிகளார் பாடிய பாடல்களில் எல்லாம் சிறப்பாக நான் கருதுவது திருச்சாழல் பதிகத்தையே. இன்றைய உலகம் கேள்வி பதில் உலகமாக இருக்கிறது. பத்திரிகைகளிலே சினிமா, சினிமா நடிகர்களைப் பற்றிய கேள்வியும் பதிலும் நிறைந்திருக்கிறது. சில கேள்விகளுக்குப் பேளுமன்னனும், சில கேள்விகளுக்குப் பைங்கிளியும் இன்னும் சில கேள்விகளுக்குச் சட்டாம்பிள்ளையும் பதில் சொல்லிக் கொண்டிருக்கிருர்கள். இதையெல்லாம் தெரிந்து தானே மணிவாசகரும் கேள்வி பதில் முறையிலேயே திருச்சாழல் பதிகம் பாடியிருக்கிருர். சாழல் என்ன விளையாட்டு என்று தெரியவில்லை. அம்மானையைப் போல் இருந்திருக்கவேண்டும். இச்சாழல் பாடல்களுக்குப் பகை புலனுக ஒரு வரலாறும் கூறப்படுகிறது. ஈழநாட்டிலிருந்து வந்த புத்தர்கள் சிலர் தில்லை வந்து தில்லைவாழ் அந்தணரை வாதுக்கு அழைத்திருக்கின்றனர். இறைவன் ஆணைப்படி மணிவாசகரே அவர்கள் வாதத்திற்குப் பதில் சொல்லவந்து நின்றிருக்கிருர். பௌத்தர்களோ வல்வழக்காட, மணிவாசகர் இறைவனை நினைந்திருக்கிருர். பௌத்தர்கள் எல்லாம் வாய்மூடி ஊமைகளாக நின்றிருக்கின்றனர். தில்லையை ஆண்ட மன்னன்

118301

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகள் ஒருத்தி ஊமையாக இருந்திருக்கிருள். கடைசியில் இறை அருளால் அவளே வாய்திறந்து பேசி, பௌத்தர்களை எல்லாம் மடக்கியிருக்கிருள். இந்த அற்புத நிகழ்ச்சிகளுக்கு ஒரு உருவம் கொடுத்தே மணிவாசகர் திருச்சாழலில் கேள்வி பதிலாகவே பாடியிருக்கிருர் என்பர்.

தென் பாலுகந்தாடும்
 தில்லைச் சிற்றம்பலவன்
பெண் பாலுகந்தான்
 பெரும்பித்தன் காணேடி

என்று சாழல் விளையாட்டில் ஈடுபட்ட பெண்ணொருத்தி கேள்வி போடுகிருள்.
இதனைக் கேட்ட மற்றொரு பெண்,

பெண்பால் உகந்திலனேற்
 பேதாய் இருநிலத்தோர்
விண்பாலியோக செய்தி
 வீடுவர் காண் சாழலோ.

என்று பதில்கூறி இருக்கிருள்.

அம்பலத்தே கூத்தாடி
 அமுதுசெயப் பலிதிரியும்
நம்பனையும் தேவனென்று
 நண்ணுவதும் என்னேடி

என்பது ஒரு பெண்ணின் கேள்வி

நம்பனையு மாமாகேள்
 நான்மறைகள் தாமறியா
எம்பெருமான் ஈசா என்று
 ஏத்தின காண் சாழலோ!

என்பது இக் கேள்விக்குப் பதிலாய் அமைகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இக் கேள்வியதில் தான் எவ்வளவு சுவையாக அமைந்திருக்கிறது.

தில்லையில் பூவல்லி கொய்து, கோத்தும்பி விரட்டி, பொன்னூசல் ஆட்டி, பலபல பாடல்களைப் பாடியபின், தன் இதயக்குயிலையும் கூவவிட்டிருக்கிருர்.

கீதம் இனிய குயிலே!
கேட்டியேல் எங்கள் பெருமான்
பாதமிரண்டும் வினவிற்
பாதாளம் ஏழினுக்கப்பால்
சோதி மணிமுடி சொல்லில்
சொல்லிறந்து நின்ற தொன்மை
ஆதிகுணம் ஒன்றும் இல்லான்
அந்தமிலான் வரக் கூவாய்.

என்று குயிலுக்கு வேண்டுகோள் விடுகிறபோது இறையுணர்ச்சி மணிவாசகரது உள்ளத்தில் நிறைந்திருக்கும் பான்மையை உணர்கிருேம். தில்லையில் மணிவாசகர்பெற்ற அனுபவம் எல்லாம் இப்பாடல்களில் விளங்கக் காண்கின்ருேம். மணிவாசகர் கண்ட தில்லை அவருக்கு மாத்திரம் அல்ல, திருவாசகம் படிக்கும் நமக்கெல்லாமே ஒரு அற்புத அனுபவமாகவே அமைகிறது.

**தாய்நாட்டுத் தமிழ்மக்கள், இந்தத் தில்லையாம் சிதம்பரத்தை நினைந்து நினைந்து மகிழ்ந்தால், சேய்நாடான ஈழத்துமக்களும் காரைநகர் என்னும் ஈழத்துச்சிதம்பரத்தை நினைந்து நினைந்து மகிழலாம்தானே. அங்கு நடக்கும் திருவெம்பாவை விழா, மணிவாசகர் விழா எல்லாம் ஈழத்தில் நிலைத்திருக்கும் சைவ உணர்ச்சிக்குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது என்று நான் சொன்னல் அது மிகை ஆகாதல்லவா.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானமும் வையமும்

வித்துவான். கி. வா. ஜகந்நாதன். M. A.,
ஆசிரியர், 'கலைமகள்', சென்னை.

வான வாழ்வை நினைந்துருகி
வையந் தன்னைப் புறக்கணித்தல்
ஈனம் என்று பக்தர்களை
இழித்துப் பேசு வார்சிலரே;
ஊனம் இல்லா ஒருவன்தாள்
உள்ளத் தமைத்து வாழ்பவருக்
கேன்அந் நிலைமை? அவர்இங்கே
இனிதே வாழ்வு பெறுவாரே (1)

வான வாழ்வு வேறன்று,
வைய வாழ்வு வேறன்று;
ஆன வாழ்வின் இருவேறு
பகுதி என்றே அறிந்திடுக
தீன ராகித் துயருற்றுச்
செய்ய வேண்டு வனசெய்வார்
மானம் இழந்தார் ஆமாகில்
வையம் வானம் இரண்டுமில்லை (2)

இறைவன் அன்பு மிகக் கொண்டால்
இங்கே வாழ்வு சிறந்திருக்கும்;
பிறஇவ் வாழ்வின் தொடர்ச்சியெனப்
பிறங்கும் வான வாழ்விருக்கும்;
உறுதி இஃதே; இங்குலகில்
உயிர்கள் பாலே அன்புசெய்து
சிறிதும் தீமை செய்யாமல்
செறியின் ஈசன் அருள்உறுமே. (3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணில் நல்ல வண்ணமாய்
வாழ லாம்மற் றிதன்பின்னர்
எண்ணில் நல்ல கதியுண்டென்
றியம்பி னூர்சம் பந்தகுரு;
அண்ணல் அவர்தம் மொழிஉண்மை;
ஆண்ட வன்பால் அன்புடையார்
எண்ணம் சிறந்திங் கினிதிருப்பார்;
இதன்பின் வீட்டி லின்புறுவார். (4)

---

எழுதரு மறைக டேரு விறைவனை யெல்லிற் கங்குற்
பொழுதறு காலத் தென்றும் பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமே லேறத் துளும்புகண் ணீருண் மூழ்கி
அழுதடி யடைந்த வன்ப னடியவர்க் கடிமை செய்வாம்

❁ ❁ ❁

அருள்வாத வூரர்சொல அம்பலவர் தாமெழுதும்
திருவா சகத்தைத் தெளிந்தால்—கருவாம்
பவகதியும் நீங்கிப் பரமரரு ளாலே
சிவகதியும் உண்டாம் சிவம்

தேசிய நூலகப் பிரிவு
மாநகர நூலக சேவை
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இம்மலரை அச்சிடுவதற்குப் பொருளுதவிய அன்பர்கள்

## காரைநகர்

1 திருமதி தங்கம்மா நடராஜா, சிவாச்சிரமம் 50-00
2 திரு. க. கணபதிப்பிள்ளை, பென்ஷனர், தீர்த்தக் கரை வீதி 10-00
3 திரு. ச. சபாபதி வித்தியாதரிசகர் 10-00
திரு. சி ஐயாத்துரை, B. A. ஆசிரியர் இந்துக்கல்லூரி 10-00
5 திரு. து. விசுவநாதன், B. Sc. ஆசிரியர் யாழ்ப்பாணக் கல்லூரி, வட்டுக்கோட்டை 10-00

## காங்கேசன்துறை

6 திரு. க. நல்லையா, சீமேந்துத் தொழிற்சாலை 10-00
7 திரு. செ. செல்லத்துரை நகை அடைவுபிடிப்பவர் 10-00
8 திரு. நா. முத்தையா பென்ஷனர், தெல்லிப்பழை 10-00

## யாழ்ப்பாணம்

9 திரு வி. சண்முகம், சகோதரர், பெரியகடை, 50-00
10 திரு. ஆ. நல்லதம்பி, நகைக்கடை 25-00
11 திரு. சி. இ. செல்லத்துரை புடைவைக் கடை 15-00
12 ஞானபண்டிதன் ஜவுளிக்கடை 10-00
13 திரு. த. குமாரசாமி புடைவைக்கடை 10-00
14 திரு. ப. கந்தையா பெரியகடை 10-00
15 திரு. க. பரமு பென்ஷனர் 3ம் குறுக்குத்தெரு 15-00
16 திரு., ச. வேலுப்பிள்ளை விரிவுரையாளர் ஆசிரிய கலாசாலை, நல்லூர் 10-00

## பளை

17 திரு. ச. தல்லதம்பி, உப அதிபர், புகைவண்டி நிலையம் 10-00

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

18 திரு. ச. செல்லையா, தலைமை ஆசிரியர், அரசினர் பாடசாலை 10-00

19 திரு. வே. சுப்பிரமணியம், பாடசாலைக்கட்டட வேலைப் பரிசோதகர், திருகோணமலை 25-00

20 திரு. சி. நாகேந்திரம், அப்போதிக்கரி, அரசினர் வைத்தியசாலை, மகாபள்ளகம 10-00

## கொழும்பு

21 திரு. மு. ஆறுமுகம் கணக்காளர், ஏற்றுமதி இறக்குமதித் திணைக்களம் 10-00

22 திரு. வே. சிவகுரு B. Sc. (Hons) உதவி ஆணையாளர், அரசாங்க மொழித் திணைக்களம் 10-00

23 திரு ஆ. பாலசுப்பிரமணியம் B. A. (Hons) உதவி ஆணையாளர், சமூகசேவைத்திணைக்களம் 10-00

24 திரு. ச. இராமச்சந்திரன், மாநகரசபை 10-00

25 திரு. பொ. வன்னியசிங்கம், பிரதமதபாற்கந்தோர் 10-00

26 Dr. கு. தண்டாயுதபாணி, D. M. O. வேருவளை 10-00

27 திரு. சி.க. ஆறுமுகம்பிள்ளை, தறவளை டிக்கோயா 25-00

28 திரு. இ. வைத்தியலிங்கம் அவதான நிலையம், மன்னார் 10-00

## மாமடு

29 திரு. வி. சுப்பிரமணியம் உபதபாற்கந்தோர் அதிபர் 10-00

30 திரு. ந. செல்லையா "யோகவாசம்" 10-00

31 திரு. ஓங்காரசைதந்நியர், கதிர்காமம் 50-00

107

R-C

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாதேவி அச்சகம், சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org